SWATHANTRA SANGU

Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

கி. வா. ஜகந்நாதன்.

விந்தையான விருதுகள்

ஸ்ரீயுத ரங்கஸ்வாமி அய்யங்கார்

கடைசி அடகு

—கதை

தூரதிருஷ்டிக் கண்ணாடி

—கதை

செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர்

—ஈ. கிருஷ்ணய்யர்

கட்டைவண்டிக் குப்பன்

—பாட்டு

ஜவஹர்லால் கடிதம்

அபலைக் குருவிகள்

வல்லரசுகள் சதுரங்கம்

—ஆறு படங்களுடன்

புத்தகம் 4. தைமீ 27உ (9-2-34) வெள்ளி இதழ் 11.

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

(மகாத்மா காந்தி எழுதியது)

கோவை அவிநாசிலிங்கமும், மதுரை சுப்பராமனும் மொழிபெயர்த்தது.

முதல் பாகம் (264 பக்கங்கள் கொண்டது) விலை ரூ. 1—0—0

மகாத்மா காந்தி முதன் முதல் சத்தியாக்கிரகத்தை நடத்தி வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் சரித்திரத்தை மகாத்மா தாமே எழுதியிருக்கிறார். இதில் பல உருக்கமான நிகழ்ச்சிகளும், உயர்ந்த தத்துவங்களும், தென்னாப்பிரிக்காவைப் பற்றிய பல விவரங்களும், அங்கு இந்தியர் நிலைமைகளும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த முதல் பாகத்தில், ஐரோப்பியரின் பலத்த எதிர்ப்புக்கிடையே மகாத்மாஜீ தென்னாப்பிரிக்காவுக்குள் பிரவேசித்து, பல ஆபத்துக்களுக்கும் ஆள்பட்டு, பெரிய தொரு சத்தியாக்கிரகப் போரை நடத்தி, சர்க்காருடன் முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது வரையிலுள்ள அரிய சரித்திரம் அடங்கியிருக்கிறது.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-C, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு " "	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-C, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 | ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] தை மீ 27உ வெள்ளிக்கிழமை (9—2—1934) [No. 11

இழந்தோம்!

வயது ஐம்பத்தேழுதான். அதற்குள் அவரது உலகவாழ்வு முடிவடையவேண்டுமா? கவர்ன்மெண்டு ஸெக்ரிடேரியட் ஆபீஸில் ஒரு சாதாரண குமாஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்தவர் பிற்காலத்தில் இரண்டு பெரிய பத்திரிகைகளின் ஆசிரிய ஸ்தானத்தை வகித்தாரெனில் அது அவரது உழைப்பையே காட்டுகின்றது. தஞ்சாவூரில் சாதாரண பிளீடராக இருந்த ஒருவர் நாளடைவில் அரசியல் சாத்திரத்தில் நிபுணரெனப் பெயர் பெற்றாரெனில் அது அவரது ஆழ்ந்த படிப்புக்கும் விடாமுயற்சிக்கும் அறிகுறியாகின்றது. மேலும் டெல்லி சட்டசபையில் பண்டித மோதிலாலுக்கு வலது கையாயிருந்தவர், மகாத்மாஜீ சீமைக்குப் போயிருந்தபோது அவரது காரியதரிசியாய் இருக்க பாக்கியம் பெற்றவர், தென்னாட்டுப் பத்திரிகை யுலகத்தில் புகழ்ப்பெற்றவர் அப்பேர்ப்பட்ட ஸ்ரீயுத ஏ. ரங்கஸ்வாமி அய்யங்காரைச் சென்ற திங்களன்று நாம் இழந்துவிட்டோம்.

சட்டக்கலை படித்தவர்கள் எவ்வளவோ பெயர் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் தேசியத்துக்கு உதவ முன் வந்துவிடுகிறார்களா? ஸ்ரீயுத ரங்கஸ்வாமி அய்யங்காரோ தமது படிப்பைத் தேச கைங்கரியத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்ற ஆசை கொண்டவர்.

தற்போதுள்ள ஆட்சிமுறை மாற வேண்டுமென்ற எண்ணம் உண்மையான ஒவ்வொரு இந்திய இதயத்திலும் ஸ்புரித்துவிட்டது. ஆனால் லட்சியத்தை அடைவதற்கான வழியைப் பற்றிப் பலவித எண்ணங்கள் இருந்து வருகின்றன. இராஜீய மேடையில் மகாத்மாஜீ தோன்றியபின்பு தீவிர வேலையிலேயே நம்பிக்கை அதிகரித்து வருகின்றது. ஆனால் ரங்கஸ்வாமி அய்யங்காரோ பழைய ராஜ தந்திரிகளுக்கும், நவயுகத்துத் தேசபக்தர்களுக்கும் நடுவில் சங்கிலிக் கணுப்போன்றிருந்தவர். அவரிடம் தீவிரக் கிளர்ச்சிக்கேற்ற உள்ளமும் உடலுமில்லை. நிதானப் போக்கிலேயே ஒரு பிரியம். சட்டசபையினால் ஏதோ சாதித்துவிடக் கூடுமென்று உள்ளூர ஒரு நம்பிக்கை. சரித்திரங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறதே அந்த பிரிட்டிஷ் தாராள இருதயத் திடம் ஓரளவு நம்பிக்கை. நல்லதனமாகப் பேசி பிரிட்டிஷாரை வழிக்குக் கொண்டுவரலாமென்று அவர்

வெகுநாள் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த நம்பிக்கையின் பயனாகவே, காங்கிரஸ் வாதிகள் எதிர்த்ததையும் பொருட்படுத்தாது, அவர் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்திற்குச் சீமைக்குச் சென்றார். ஆனால் அங்குதான் அவருக்குப் புலனாயிற்று பிரிட்டிஷாருக்குத் தாராள எண்ணம் என்பது ஏட்டுச் சுரைக்காய் என்ற விஷயம்! வெளியே பகிரங்கமாககச் சொல்லிக் கொள்ளாவிடினும் கூட்டுக் கமிட்டிக் கூட்டத்தின் இடையிலே தம்மைக் கத்தரித்துக்கொண்டு அவர் திரும்பிவிட்டார். ஸ்ரீயுத ரங்கஸ்வாமி அய்யங்காரின் இந்த அநுபவம் இந்திய மிதவாதிகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்குமென்று நம்புகிறோம்.

தமிழ்ப் பத்திரிகை யுலகத்துக்கு ஸ்ரீயுத அய்யங்கார் செய்த சேவை மறைமுகமானது. அவர் சுதேசமித்திரன் ஆசிரியராக அமர்ந்ததன் பின்புதான் இந்திய இராஜீய உலகில் அரசியல் விஷயங்கள் தாராளமாக அலசி விவாதிக்கப் பட்டன. அதற்கு முன்னே யெல்லாம் தமிழ்ப் பத்திரிகைகள் எழுதும் தலையங்கங்களில் அரசியல் சாத்திர ஆங்கிலச் சொற்கள் அப்படியப்படியே உபயோகிக்கப்பட்டு வந்தன. ஆனால் ரங்கஸ்வாமி அய்யங்கார் தமிழ்ப் பத்திரிகாசிரியரா யிருந்த காலத்தில் கருத்துக்கேற்ப புதிய பதங்களைச் சிருட்டித்துத் தமது தலையங்கங்களில் நுழைத்து வந்தார். அரசியலை வர்ணிக்கும்போது தேவையான இடங்களில் வடமொழிப் பதங்களையோ, தமிழ்ப் பதங்களையோ நுழைத்து அதை வழக்கத்தில் கொண்டு வந்துவிட வேண்டுமென்பது அவரது கொள்கை. இன்றைக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் அரசாட்சியின் ஒவ்வொரு நுணுக்கத்தையும்பற்றி விவரிக்கும் சக்தியுடையனவாக இருப்பதற்கு ரங்கஸ்வாமி அய்யங்காரின் மறைமுகத் தொண்டும் ஓரளவு காரணமாகும்.

அவரது அரசியல் அபிமானமும், பத்திரிகைத் திறனும் ஓர் புறம் இருக்கட்டும். ரங்கஸ்வாமி அய்யங்காரின் உள்ளம் குழந்தையுள்ளம் போன்றது. ஆதியில் மிக்க கஷ்டப்பட்டு பிறகு நிமிர்ந்தவர். ஆகையால் அவரையணுகும் மனிதரின் கஷ்ட நிலைமைகளை எளிதில் உணர்ந்து இரங்கும் ஸ்வபாவமுடையவர். எவ்வளவோ இளைஞர்களுக்கு அவர் வழிகாட்டியாகவும், ஆறுதல் கூறுபவராகவும் இருந்து வந்தார். அவருடைய மரணம் எவ்வளவோ பெயர்களுக்கு இடிபோலத் தைத்திருக்கிறது. என் செய்வது!

அவருடைய குமாரருக்கும், இதர உறவினருக்கும் 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' காரியாலயங்களுக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

லஞ்சம் வாங்குபவர்களா?

இருந்தாப்போலிருந்து சுதேச அரசர்களின்மீது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒரு கருணை பிறந்திருக்கிறதே, அதுதான் வேடிக்கையா யிருக்கின்றது. 'சமஸ்தானப் பாதுகாப்பு மசோதா' என்று ஒன்று சமையற் கூடத்தில் தயாரிக்கப்படுகிறது. அது நிறைவேறிச் சட்டமானவுடன் சுதேச சமஸ்தானங்களைப் பற்றிப் பேசவும் எழுதவும் எவருக்கும் கதி கலங்குமாறு செய்துவிடப் போகிறார்கள். பிறகு கேட்கவேண்டுமா? தட்டிப் பேச ஆளிருக்கும்போதே தடபுடல் தர்பார் நடத்தும் சுதேச அரசர்கள் பிறகு அட்டகாசம் செய்யத்தான் போகிறார்கள்! மேற்படி மசோதாவுக்குச்சென்னை அரசாங்க சர்க்கார் காரியதரிசி அது ஆதரவு கொடுத் திருக்கிறாராம். அது தான் வெகு ரஸமாயிருக்கிறது. சென்னை ராஜதானியில் சுதேச சமஸ்தானங்களிருக்கின்றனவா இல்லையாவென்று விளக்குப்போட்டுப் பார்க்கவேண்டும் ஆனாலும் சென்னை மாகாணக் காரியதரிசி பிரமாதமாக அபிப்பிராயம் எழுதியதில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றனவாம். "இனிமேல் உத்தியோகம் வகிக்கக்கூடிய மாஜிஸ்திரேட்டுகள் லஞ்ச வலைக்கு மிஞ்சினவரா யிருப்பார்களென்ற உறுதியுண்டா? தனி மனிதர்களுக்கு லஞ்சம் கொடுக்கக்கூடிய அளவு சொத்து சமஸ்தானங்களுக்கு உண்டு" என்று அவர் ஓர் கருத்து விட்டிருக்கிறாராம். இந்தச் சொற்களுக்கு அர்த்தமென்னவாயினும் இந்த சாம்ராஜ்யத்தின்கீழ் நீதிஸ்தலங்களிலும் அக்ரமம் நடக்கக் கூடுமென்பதை அவரே சொல்கின்றார். இப்படி ஒரு மாகாணக் காரியதரிசி அபிப்பிராயம் தருவதை இதர உத்தியோகஸ்தர்களெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பது தான் அதைவிட ரஸமா யிருக்கிறது.

விந்தையான விருதுகள்!

சென்னைக் கார்ப்பொரேஷன் மேயருக்கு ஒரு புதிய கவுன் சட்டையும், அழகான தங்கச் சங்கிலியும் விருதுகளாக இருந்தால்தான் அவருடைய 'அந்தஸ்து' சரியாயிருக்குமெனச் சில மாதங்களுக்கு முன் சிலர் நினைத்தார்களல்லவா. வங்காளச் சட்ட சபை அக்கிராசனருக்கு இப்போதுள்ள கவுரவம் போதவில்லையாம். புதிய விருதொன்று அவருக்குத் தரப்பட்டிருக்கிறது. ஒரு கதாயுதம் அவரோடு சபைக்குள் நுழைந்து அவரது அமுலுக்கு அலங்காரமாக வீற்றிருக்கப் போகிறதாம். நவீன அரசியலில் அமுல் காட்டுவது தொண்டையும் பேனாவுமே என்று நினைத்திருந்தோம். இனி, சபையில் 'கதாயுதம்' கூட உபயோகிக்கப்படும் போலும்.

சட்டை, சங்கிலி, கதாயுதம் இந்த சாமான்களெல்லாம் முப்பாட்டனார் காலத்துச் சம்பிரதாயங்கள். இங்கிலாந்தின் பார்லிமெண்டுக்கு ஓர் கதாயுத விருது உண்டு. ஆலிவர் கிராம்வல் பார்லிமெண்டைக் கைப்பற்றியபோது அந்த 'விருதைத் தூக்கி யெறிந்தானென்று ஒரு கதை யுண்டு. சில வருடங்களுக்கு முன்னே சீமையில் தொழிற்கட்சி அரசாங்கம் நடத்திய போது ஒரு காமன்ஸ் சபை அங்கத்தினர் இந்த கதாயுதத்தைத் தூக்கி ஓடிச் சபையில் கலாட்டா ஏற்படுத்தியதையும் சிலர் மறந்துவிடவில்லை. இந்த மாதிரி விருதுகளை அதிகம் செய்து கொள்வது பகட்டு மோகமே யன்றி வேறில்லை.

அழுக வைக்கிறார்கள்!

ஹிந்து மதத்தின் உன்னதத்தை அழுகச் செய்து கொண்டிருப்பது தீண்டாமை. அந்த அழுகலை நிவர்த்திக்க வேண்டுமெனச் செய்துவரும் அநேக முயற்சிகளில் டெல்லி சட்ட சபையில் எம். ஸி. ராஜா அவர்கள் கொண்டு வந்த தீண்டாமை விலக்கு மசோதாவும் ஒன்று. பிரிட்டிஷ் நீதிஸ்தலங்களில் தீண்டாமைக்கு ஆதரவு தரலாகாது என்பது அந்த மசோதாவின் முக்கிய நோக்கம். தீண்டாமை யொழிய வேண்டுமா வேண்டாமாவென்பதற்கு மகாத்மா காந்தி யடிகளின் தற்கால யாத்திரையில் பொது ஜனங்கள் தரும் வரவேற்பே போதுமான அறிகுறியாகும். ஆனால் பொது ஜனங்களுக்குள்ள அபிப்பிராயம் டெல்லி சட்ட சபையில், பங்காக்களினடியில் இருப்பவர்களுக்குத் தெரிய நியாயமுண்டா? ஆகவே தீண்டாமை விலக்கு மசோதா'வை தனிக் கமிட்டிக்கு அனுப்புவார்களென்று பொது ஜனங்கள் எதிர்பார்த்தபடி செய்யாமல் 'அபிப்பிராயம் அறிந்து கொள்வதற்காக' அடுத்த ஆகஸ்டு மாதம் வரை ஒத்திவைப்பதென்று நிர்ணயித்து விட்டார்கள். இன்னும் ஆறுமாதத்துக்கு, மசோதாவை ஊர்வலமாக அனுப்பித் தாமதம் செய்வதால் என்ன ஆகப் போகிறது? அழுகல் அதிக அழுசலாகப் போகிறது. இவ்வளவு கிளர்ச்சிக்குப் பின்னும் சட்ட சபையிலுள்ள அண்ணாத்தைகளுக்கு அபிப்பிராயம் பிடிபடவில்லையென்றால், அதற்கு எந்த மூலைகளைக் குற்றஞ் சொல்வது? இப்படியோ அப்படியோ வோட்டுக் கொடுத்து விஷயத்தைத் தீர்த்து முடிப்பதற்குச் சட்ட சபைப் பெரியார்களுக்குத் தைரியமும் இல்லையென்று இதனின்று ஏற்படுகிறது.

சட்டசபைச் சந்தையில்

டெல்லி சட்டசபை என்ன அபார வேலை செய்திருக்கிறதாம் தெரியுமா? சென்ற 13 வருஷங்களுக்குள் 364 சட்டங்களை அது தயாரித்திருக்கிறதாம். மிக்க கடுமையான வேலைதான். ஆனால் இந்த 13 வருஷ வேலையினாலும் 364 சட்டங்களாலும் ஒரு 'ஜம்பா' நீளமாவது நாடு நகர்ந்திருக்கிறதாவென்றால், அதுதான் இல்லை. ஆனால் நாட்டுக்குத் தீமை விளைவிக்கத் தக்க ஏற்பாடுகளுக்கோ குறைவில்லை. உதாரணமாக ஒட்டவாத் தீர்மானம்! இதர நாடுகளிலெல்லாம் சட்டசபைகள் கடுமையான வேலைத் திட்டங்களையும் அதற்கு அனுகுணமான சட்டங்களையும் தயாரிக்கின்றன. எல்லோரும் நெல் உலர்த்தினால் எலி தன் வாலை உலர்த்த வேண்டாமா? இந்தியாவின் சட்ட சபை 364 சட்டங்களைச் சில வருஷங்களில் தயாரித்துத் தனது சமர்த்தைக் காட்டியிருக்கிறது.

சப்பைக் கட்டுப் பேச்சு!

டெல்லித் தெய்வங்கள் மலையேறப் போகின்றன! அதாவது ஸிம்லாவுக்கு இந்த வருஷமும் யாத்திரை போகப் போகின்றார்களென்பது தெரிந்துவிட்டது. வருஷா வருஷம் இப்படி ஆறாறு மாதம் மலையேறுந் திருவிழாவும் இறங்கும் உத்ஸவமும் நடத்துவதால், சில டெல்லிக் காரியாலயங்கள், மூட்டை முடிச்சுகள் கட்டி அவிழ்த்துக் கட்டி அவிழ்ப்பதிலேயே வீணாகக் கால நஷ்டம் செய்துகொண் டிருக்கின்றன. காலம் நஷ்டமாகும்போதுகூட இந்திய வரிப்பணத்தினின்று உத்யோகஸ்தர்களுக்குச் சம்பளம் தரவேண்டி யிருக்கிறது. இந்த யாத்திரை போகாத போனால், இந்த நஷ்டங்களில்லை யல்லவா?

ஸிம்லா யாத்திரையைப்பற்றிச் சிலர் ஆட்சேபித்தபோது தமது கட்சிக்குச் சப்பைக் கட்டுப் பேச்சுப் பேசி ஹார்ரி ஹெயிக் ஆதரித்ததுதான் வேடிக்கையா யிருக்கிறது.

"நல்ல வேலை செய்யவேண்டுமானால் நாம் பணச் செலவைப் பார்க்கலாமோ?" என்று ஓர் காரணம் கூறியிருக்கிறார். ஸிம்லாவில் மூளை ஜிலுஜிலுப்படைந்து எல்லோரும் உறங்குவதுதான் நல்ல வேலையோ? டெல்லி உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் கம்பிளிகளுக்குள் புகுந்து கொள்வதால், தேசத்திற்காகச் செய்யும் நல்லவேலை யென்னவோ? அவருடைய இன்னொரு காரணமும் விந்தை யூட்டுவதா யிருக்கிறது. "நாம் ஸிம்லாப் பிரயாணத்தை நிறுத்திவிட்டால் வடமேற்கு ரயில்வேக்கு நஷ்டம் வந்துவிடுமே" என்று ஓர் காரணம். இதுதான் குல்லாய்க்குத் தகுந்தாற்போலத் தலை செய்யும் கட்சி! அப்படி நஷ்டத்தில் வேலை செய்துகொண்டிருக்கும் அந்த ரயில்வேயையே எடுத்துவிட்டால் அது ஒரு லாபம். ரயில் இல்லையென்றால் ஸிம்லாவுக்குப் போக வழியில்லாது போவதால் வீண் செலவு மிச்சம். இந்த லாபங்களை ஹார்ரி ஹெயிக் செய்து உதவலா மல்லவா?

ஸ்ரீயுத வல்லபாய்

"காங்கிரஸின் மாஜி அக்கிராசனாதிபதிகளான ஸ்ரீயுத எம். எஸ். ஆனே அவர்களும், ஸர்தார் சார்தூல சிங் அவர்களும் அவர்கள் தண்டனைக் காலம் பூர்த்தி யடைவதற்கு முன்னமேயே விடுதலை செய்யப்பட்டு விட்டனர். இவ்வாறு செய்ததற்கு என்ன காரண மென்பதற்குச் சர்க்கார் பகிரங்க அறிக்கை யெதையும் வெளியிடவில்லை. ஆனால் அதே கொள்கையின்படி சிறையி லின்னும் வைக்கப்பட்டுள்ள ஸர்தார் வல்லபாய் படேலை ஏன் விடுவிக்கவில்லை யென்பது ஆச்சரியமா யிருக்கிறது. ஸ்ரீ வல்லபாய் படேலை எந்தக் கோர்ட்டும் விசாரித்துத் தண்டிக்கவில்லை. பம்பாய் ரெகுலேஷன் சட்டத்தின் கீழ்த்தான் காவலில் வைக்கப்பட்டுள்ளார்........... அவரை அக்காலத்தில் விசாரித்துத் தண்டித்திருந்தாலும் அந்தத் தண்டனைக் காலம் இதற்குள் பூர்த்தி யடைந்திருக்கும். அவரை விடுதலை செய்தால் கஷ்டப்படும் பீஹாருக்கு உடனே ஓடி வருவாரே! அவரை இன்னும் கைதியாக வைத்திருப்பதற்குச் சர்க்கார் என்ன சரியான காரணம் சொல்கிறது?" என்று டிரிபியூன் பத்திரிகை கேட்கிறது. காரணமாவது மண்ணாங்கட்டியாவது! அதிகாரத்தின் அமுலைக் காட்டுவதுதான் சர்க்காரின் வேலை யென்பதை 'டிரிபியூன்' தெரிந்து கொள்ளட்டுமே!

பிச்சைக்காரர்களை ஒழிக்க

பிச்சைக்காரர் தொல்லையை ஒழிப்பதற்காகப் பஞ்சாப் சட்டசபையில் ஓர் மசோதா விவாதத்துக்கு வரப் போகிறது. தெருவில் குழந்தை குட்டிகளோடு நின்றுகொண்டு போவார் வருவாருக்குப் பச்சாத்தாபம் ஏற்படுத்திப் பிச்சை வாங்குவதற்காக யாராவது நின்றால், அவர்களுக்கு 50 ரூ. அபராதமோ மூன்று மாதம் சிறைத் தண்டனையோ கொடுக்க வேண்டுமென்று அம்மசோதாக் கூறுகின்றது. 14 வயதுக்குட்பட்ட சிறுவர் பிச்சையெடுப்பதற்குத் தூண்டப்பட்டால் அச்சிறுவரின் தாய் தந்தையர் குற்றவாளிகளாகக் கருதப்பட வேண்டுமென்று அம்மசோதா சொல்லுகிறது. கை கால் ஊனமாகி வேறு வழியின்றிப் பிச்சையெடுப்பவர்களுக்கு, சர்க்கார் லைசன்ஸ் தரவேண்டுமென்றும் அம்மசோதா கூறுகிறது! இந்த மசோதாவின் முழு விவரமும் கிடைக்காவிடினும் இது விஷயமாக எல்லாச் சட்டசபைகளும், முனிஸிபாலிட்டிகளும் சிரத்தை காட்ட வேண்டுமென்பது ஏற்படுகிற தல்லவா? இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் எது பிச்சை, எது தானம் என்று சட்டரீதியாக நிச்சயிப்பது கடினம்தான். இந்தியாவின் மத தர்மங்களெல்லாம் 'தானம்' செய்வதைப் பிரதானமாகக் கூறியிருப்பதால் தான் சமுசயங்க ளேற்படுகின்றன. ஆனால் இத்தகைய மசோதாவைக் கொண்டு வருவதற்குமுன் பிச்சைக்காரர்களுக்கு உருப்படியான ஜீவனத்திற்கு ஏதாவது உபாயங்களைக் காட்டிவிட்டுச் சட்டம் செய்வதே சரியான வழியென்று நமக்குத் தோன்றுகிறது.

மடாதிபதிகளே!

நமக்கு ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது. அதில் அன்பர் சொல்லியுள்ள விஷயங்கள் கவனிக்கத் தக்கவை. "வடக்கே பூகம்பத்தினால் வீடு வாசல்களை யிழந்து, உறவினரை யிழந்து தவிப்போர் பல்லாயிரம் பேர். அவர்களுடைய கண்ணீரைத் துடைத்துச் சவுகர்யங்கள் செய்வதற்காக, காந்திஜி, பாபு ராஜேந்திரர், மாளவியா, ஜவஹர்லால் முதலிய ஜனநாயகர்கள் முனைந்து விட்டார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்களும், ஏழைத் தொழிலாளிகளும் எல்லோரும் கஷ்ட நிவாரண நிதிக்கு உதவுகின்றார்கள். இந்த நிதிக்குத் தென்னிந்தியாவிலுள்ள மடாதிபதிகளும், ஆச்சாரியாக்களும், ஜீயர்களும், சந்நிதிகளும் என்ன உதவி செய்திருக்கின்றார்கள்? பீஹாருக்கு அடுத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு மடாதிபதி தெற்கே ஊர்வலம் வந்து கொண்டிருக்கின்றாராமே, ஏன்? தேசத்துக்கு என்ன கேடு வந்தாலும் அத்தனையையும் சமாளிக்கக் காந்தி கோஷ்டியையும், தூங்குவதற்கு இதர கோஷ்டிகளையும் ஆண்டவன் படைத்தானா என்ன?" என்பது அன்பரின் கேள்வி. அன்பரின் கேள்விக்கு மடாதிபதிகள் என்ன பதில் சொல்லப் போகின்றார்களென்பது பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் இந்த நாட்டில் இனிச் சேவை செய்வோருக்குத் தான் மதிப்புத் தரவேண்டும். போலிகளையும் வீண் பேச்சுக்காரர்களையும் புறக்கணிக்க வேண்டும் என்ற மனோபாவம் வந்துவிட்டது என்பதை மட்டும் எச்சரிக்கை செய்கின்றோம்.

வழிப்போக்கர் வம்பு

பூமிப் பிரதட்சிணப் பரிசு!

முற்காலத்தில் யாராவது அரசராக வருவதென்றால் திக்விஜயம் செய்து வர வேண்டுமென் றிருந்தது. மடாதிபதியாக வர வேண்டுமானால் பூப்பிரதட்சிணம் போய் வர வேண்டு மென்றிருந்தது. அந்த சம்பிரதாயத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் பின்பற்றுமோ என்னவோ தெரியவில்லை. லார்ட் லண்டன்டெர்ரி என்பவர் 10 ஆயிரம் மைல்கள் ஆகாய விமானத்திலேயே அமர்ந்து பூமிப் பிரதட்சிணம் செய்துவிட்டுச் சீமைக்குத் திரும்பி விட்டாராம். வில்லிங்டன் துரைக்குப் பின்பு இந்திய வைஸ்ராய் உத்தியோகத்துக்கு லார்ட் லண்டன் டெர்ரி பெயரும் அடிபட்டு வருகின்றது என்பது ஓர் பகிரங்க ரகஸ்யம். பூமிப் பிரதட்சிணத்துக்கு நன்கொடையாக இவ்வளவு பெரிய பதவியைத் தருவதாயிருந்தால், அந்த உத்தியோகத்துக்குப் பலர் சுலபமாக 'அப்ளிகேஷன்' போடுவார்களே!

யாருக்குத் துடுக்கு?

“இராணுவத்தை இந்தியர் கைக்குள் விட்டுவிடவேண்டுமாமே! என்ன துடுக்குத்தனமான வேண்டுகோள்!” என்று ஸாடர்டே ரெவியூ என்ற ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு மகான் கேட்டிருக்கிறார். குப்பன் தன்வீட்டு உரிமைகள் தன்னிடமே யிருக்கவேண்டுமெனக் கேட்டதில் துடுக்குத்தனம் கிடையாது. ஆனால் டாம் டிக் ஹார்ரி, குப்பன் வீட்டுக்குள் பலவந்தமாக நுழைந்து அத்தனையும் தன் மேற்பார்வையிலேயே நடக்க வேண்டுமெனக் கூறினால், அதுதான் 'துடுக்குத்தனம்!' என்று தோன்றுகிறது.

கூட்டுக்கமிட்டி விழுங்கியது

எண்ணெய்ச் செலவே யொழிய, பிள்ளை உருப்பட்ட பாட்டைக் காணோம். ஆள் பைசலாகிப் போனாலும் டாக்டர் செலவுக்குக் குறைவில்லை. அதேபோல் கூட்டுக் கமிட்டியினால் இந்தியாவுக்கு இம்மி லாபமும் இல்லாத போனாலும் அதற்கான செலவுக்கென்னமோ குறைவில்லை. பிரதிநிதிகள் சீமைக்குப் போனதற்கும், தங்கியிருக்கவும் தரப்பட்ட செலவுகள் எல்லாம் சேர்த்து மொத்தம் 24,797 பவுன்கள் செலவாகியிருப்பதாக, சர்க்கார் கொடுத்துள்ள கணக்கினின்று தெரிகிறது. இவ்வளவு தொகையை அனாவசியமாகச் செலவழித்து ஓர் காரியமும் சாதிக்காததைப் போன்ற வெட்கக்கேடு வேறுண்டோ? இந்தக் காரியத்தில் செலவழிக்காம லிருந்து அவ்வளவையும் பீஹார் பூகம்பக் கஷ்ட நிவாரணத்துக்குக் கொடுத்திருந்தாலாவது நன்றா யிருக்குமன்றோ!

புத்தகம் 50 ரூபாயா?

சீமையில் நடந்த கூட்டுக் கமிட்டி நடவடிக்கைகளையும் சாட்சியங்களையும் திரட்டி சர்க்கார் புத்தக ரூபத்தில் வெளியிட்டிருக்கிறார்களாம். விலை 3½ பவுனாம்! அதாவது சுமார் 50 ரூபாய். காலணா பெறாத பேச்சுக்களை யெல்லாம் சேர்த்து 50 ரூபாய் விலை வைத்து விற்றால் யார் வாங்கப் போகிறார்கள்? கூட்டுக் கமிட்டிக்குப் போனவர்கள் தான் தங்கள் தங்கள் சாமர்த்தியத்தின் ஞாபகார்த்தமாகச் சில புத்தகங்களை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

தஞ்சைக்கு 25 மைலில்

தஞ்சாவூருக்கு 25 மைல் தெற்கே ஓரிடத்தில் நவரத்தினப் பொக்கிஷமொன்று புதைபட்டுக் கிடப்பதாகவும் அது சம்பந்தமான விவரணப்படமொன்று மிஸஸ் எச். கிரிப்பித் என்ற ஆங்கில மாதிடம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவளுக்கு அந்தப் படம் அவளுடைய மூதாதையரிட மிருந்து பிதிரார்ஜிதமாகக் கிடைத்ததாம். அந்த அம்மாளுடைய படத்தை 'பம்பாய் ஸெண்டினல்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இந்த மிஸஸ் கிரிப்பித் நவரத்தின வேட்டை, தேடி இந்தியாவுக்கு வந்திருக்கிறாளா? வரப்போகிறாளா?

சீமை கிரிக்கெட் கோஷ்டியார்

ஹிமாலயத்தின் உச்சிக்கு ஏறிவர வேண்டுமென்பதற்காக ஓர் பிரிட்டிஷ் படை முயற்சி செய்யப் புறப்பட்ட போது ஓர் ஆங்கிலச் சீமாட்டி அதற்கான செலவு தொகைகளைத் தர முற்பட்டாள். பிரிட்டிஷாருக்குள்ள திறமையையும், தைரியத்தையும் உலகுக்குக் காட்டவேண்டு மென்பது அவள் ஆசை. குறிப்பாகப் பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கி எறிந்துவிடவேண்டுமென நினைத்துள்ள இந்தியருக்கு அதை நினைவுறுத்த வேண்டுமென்பது அவள் எண்ணம். இந்தியாவில் இன்றைக்குச் சீமையிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி ஒன்று வந்திருக்கிறதே, அதற்கும் அதேமாதிரி பிரிட்டிஷார் பராக்கிரமத்தைப்பற்றி இந்தியருக்குப் போதிக்க வேண்டுமென்ற எண்ணமிருக்குமோ என்னவோ?

இந்தியர்களுடைய திறமையைக் காட்டுவதான சில விளையாட்டுக்கள் உண்டு. அந்த விளையாட்டுக்களைக் காட்டுவதற்காகச் சீமைக்கு ஒரு இந்திய ஜமா சென்றால் எவ்வளவோ நன்றாயிருக்கும். இரவல் வாங்கிய விளையாட்டான ஹாக்கியிலும் இந்தியர்கள் தங்கள் திறமையைக் காட்டி உலகெங்கும் சுற்றி எல்லோரையும் தோற்கடித்ததுண்டு.

கிரிக்கெட் சம்பந்தப்பட்டமட்டில் விஜயநகரம் மகாராஜ குமாரரின் தலைமையில் ஒரு இந்தியக் கோஷ்டி காசியில் சீமைப் படையை சமீபத்தில் தோற்கடித்தது கவனிக்கத் தக்கதே.

இந்தியாவின் முன்னேற்றத்துக்கு அறிகுறியென, கிரிக்கெட் சாமர்த்தியம் இருந்தாலும் இருக்கலாம்; இல்லாமற்போனாலும் போகலாம். ஆனால் இந்தியாவில் தங்கத் தொட்டிலில் தவழ்ந்து வளர்ந்த எவ்வளவோ பணக்காரர்கள் இருக்கிறார்களே—எவ்வளவோ ஓய்வு நேரமும் தேகபலத்திற்கான மருந்துகள் சாப்பிட வசதியும் அவர்களுக்கு இருக்கின்றதே—அவர்கள் நல்ல பயிற்சிக் கூடங்கள் ஏற்படுத்தி இந்தியர்களுக்கும் பௌருஷ விளையாட்டுகளில் திறமையுண்டு என்பதை நிரூபிக்க முயற்சி யெடுத்துக் கொள்ளக் கூடாதா?

—மாடர்ன் ரெவியூ.

தூரதிருஷ்டிக் கண்ணாடி

('முத்து' எழுதியது)

அருணாசலய்யர் நல்ல மனிதர்தான். ஈரமுள்ள நெஞ்சமும் காரணத்திற் குகந்த மனமும் படைத்தவர். தன் மனைவியுடன் சென்னையில் வசித்து வந்தார். இருவர் அன்பும் உறைந்தது போல் ஒரு பிள்ளைக் குழந்தையுண்டு. அதைக் கண்ணுக்குக் கண்ணாகப் பாராட்டிச் செல்வமாய் வளர்த்து வந்தார்கள்.

அதென்னவோ சென்னைக்கு வந்த பிறகுதான் அவருக்கு அந்த ஒரு துர்ப்பழக்கம் உண்டாகி யிருக்கவேண்டும். கிராமத்திலுள்ளவரை அவ்வளவு நல்லவராக இருந்திருக்கிறார். அந்த ஒரு துர்ப்பழக்கத்தையும் அவர் இரகசியமாகத்தான் கையாண்டு வந்தார். மனைவி மகனின் எண்ணம் வரும்போதெல்லாம், அவர் மனது படபடத்துப் போகும்; நெற்றியில் இரண்டொரு முத்துப்போன்ற வியர்வைத் துளிகளும் தென்படும்.

அப்பேர்க்கொத்த மனோ வியாகூலத்துக்குக் காரணம்தா னென்ன?

காரணமில்லாமலில்லை.

எல்லாம் அந்த ஒரு துர்ப்பழக்கம் தான். அதுதான் அவரை வருஷத்தின் சில மாதங்களில் சனிக்கிழமையும் புதன்கிழமையும் தவறாமல் 'கிண்டி'க்குப் போகச்சொல்லும். குதிரைப் பந்தயத்தில் தன்னையறியாமல் அடக்க முடியாத ஒரு ஆசை அவரைப் பிடித்துக்கொண்டது. பிடித்துக்கொண்ட நாளும் அவர் குடும்பத்துக்கு நல்ல நாளா யிருந்திருக்காது.

பகுத்தறிவுள்ள எந்த மனிதனும் அதற்குட்படலாமா என்று கேட்கலாம். ஆம்; அந்தப் பகுத்தறி வுணர்வுதான் அவருக்குத் தன் அருமை மனைவியையும் அன்புக் குழந்தையும்பற்றி நினைக்கும்போது நெஞ்சத்தைக் கலக்கியது. ஆயினும் அது துர்க்குணத்தை உதறித்தள்ளக்கூடிய வலிமை அவருக்கு ஏற்படவில்லை. நெஞ்சத்தின் உறுதி கையாள முடியாததாகப் போயிற்று.

அவர் மனைவி படித்தவளல்ல. ஆதலால் அவள் தன் கணவனின் நடத்தையில் தனிமையொன்றையும் கவனிக்கவில்லை. அன்பொன்று அவளது வழிகளையும் சிறிது மறைத்ததென்று சொல்லலாம்.

செல்வக் குழந்தை சீனுவுக்கு ஆறு வயது பிராயம் நடந்துகொண்டிருந்தது. துறுதுறுவென்று அலைந்துகொண்டேயிருப்பான். ஓரிடத்தில் ஸ்திரமாகக் காணமுடியாது. அது குழந்தைகளுக்கே ஸ்வபாவம்.

அத்துடன்கூட அவனுக்கு எதையாவது குடைந்துகொண்டே யிருப்பதில் ஒரு பிரியமுண்டு. அப்பா சட்டைப் பையெல்லாம் துருவிப் பார்ப்பான். அம்மா தவறிப் பெட்டியைத் திறந்து வைத்துவிட வேண்டியதுதான்; அரை நொடியில் அது களேபரமாகிவிடும். காட்டிக்கொள்ளவும் மாட்டான். வெளியூரிலிருந்து யாராவது வந்திருந்தால் அவர்களுடைய சாமான்களையும் பக்ஷபாதமில்லாமல் தன் பரிசோதனைக் குள்ளாக்குவான்.

ஒரு நாள் தந்தை அவசர அவசரமாகத் தம் காரியாலயத்திற்குப் போக வேண்டியிருந்தது. ஆதலால் அவர் தம் காரியங்களை அரைகுறையாகவே செய்துவிட்டுச் சென்றார்.

அவரது அலமாரி அவசரத்தில் மூடப்படவில்லை. இந்த அலமாரிதான் வெகு நாளாகச் சீனுவின் மனதில் உறுத்திக்கொண் டிருந்தது. இதை எப்படியாவது திறந்து பார்க்க அவாக்கொண்டிருந்த சீனு இந்த அரிய சமயத்தை விட்டுவிடவில்லை.

அலமாரியைத் திறந்தான். அங்கு விசேஷமாக ஒன்றுமில்லை. ஒரே ஒரு வஸ்துத்தான் அவன் கண்ணைக் கவர்ந்தது. அது தந்தை குதிரைப் பந்தயத்தின்போது உபயோகிக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடி.

அதை யெடுத்துப் புரட்டிப் பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை. என்னென்ன வெல்லாமோ செய்துபார்த்தான். ஒன்றும் பிடிபடவில்லை. கண்ணில்தான் வைத்துப் பார்ப்போமே என்று எண்ணி, கண்ணில் வைத்துக்கொண்டான். பெரிதுபெரிதாக ஒன்றிலிருந்து முப்பதுவரை இலக்கங்கள் தெரிந்தன. கண்ணிலிருந்து அதை நீக்கி நேராகப் பார்த்தான். எதிர்ச் சுவரில் ஒரு மாதாந்தரக் காலண்டர் மாட்டியிருந்தது. அதுதான் பெரிதாகத் தெரிந்ததென்று ஊகித்தான். அளவிலாச் சந்தோஷம் உண்டாயிற்று.

சுற்று முற்றுமுள்ள வஸ்துக்களை அதன் மூலமாகப் பார்த்துக் களித்தான். உடனே அதை யெடுத்துக்கொண்டு மொட்டை மாடிக்கு ஓடினான்.

அந்தக் கண்ணாடியால் பல விநோதக் காட்சிகளைக் கண்டதும் அவனது இருதயம் எவ்வளவு விரிவடைந்தது! சிறு குழந்தையின் உள்ளம் எவ்வாறு களிப்படையும் தெரியுமா? அதற்கு ஒப்பான வேகமே கிடையாது.

இவ்வாறு நோக்கி வந்துகொண்டிருந்தபோது, ஒரு ஜன்னல் தென்பட்டது. அதை ஊடுருவிப் பார்த்தான்.

சற்று முன்பு களங்கமற்றிருந்த வதனம் மாறுதலடைந்தது. முகத்திலேயே ஒருவித அச்சம் தோன்றிற்று.

எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாக உள்ளத்தில் களி புகுந்ததோ அவ்வளவு சீக்கிரமாக அது அகன்றது!

* * *

மாலை வேளை. இருட்டி விட்டது. நட்சத்திரங்கள் மெள்ளமெள்ள உதிக்கலாயின. மேகங்கள் அங்குமிங்கும் அலைந்துகொண் டிருந்தன.

மொட்டை மாடியில் ஒரு சாய்வு நாற்காலியில் அருணாசலய்யர் உட்கார்ந்திருந்தார். அவர் கண்கள் மூடப்பட்டிருந்தன. அவ்வப்பொழுது ஒருவித நடுக்கம் மின்னல்போல் தோன்றி மறையும். அவைகள் என்ன? எண்ண அலைகளின் செயலன்றி வேறொன்றுமில்லை.

கால்மாட்டில் மனைவி உட்கார்ந்துகொண்டிருந்தாள். மூலையில் செல்வச் சீனு ஒரு மரப்பாச்சியை வைத்துக்கொண் டிருந்தான். அவனைப் பார்த்தால் ரஸிக்காமலே விளையாடிக்கொண் டிருந்தான் என்றுதான் சொல்ல முடியும்.

"என்ன, அக்கா வழக்கமா வருவளே? இன்னிக்கி வரவேல்லே" என்றாள் மனைவி.

"வரவில்லையே, என்ன. விசேஷ அலுவலேதாவது இருந்திருக்கலாம்"

என்று சமாதானம் கூறினர் அய்யர்.
“என்னன்னு ஆபீஸ்லேந்து வந்த
தேத்தொட்டு என்னவோ மாதிரியிருக்
களே. ஒடம்பு எதாவது தொங்
திரவா” என்று பரிவுடன் மனைவி
கேட்டாள்.
“ஒன்றுமில்லை. கொஞ்சம் அதிக
மாக வேலையை இழுத்துப் போட்டுக்
கொண்டேன். அதான் கொஞ்சம்
சிரமமாக விருக்கிறது. வேறே ஒன்று
மில்லை” என்று பதில் சொன்னர்.
“சிரமமாக இருக்குன்னு சொன்ன,
ஏதாவது சாப்பிடக்கூடாதா. காபியா
வது சாப்பிடுங்கோ” என்ருள்
மனைவி.
“அதெல்லாம் வேண்டாமென்ருல்
கூடக் கேட்கமாட்டே னென்கிருயே?
போனல் போகிறது. கொஞ்சம் காபி
மட்டும் கொண்டுவா” என்று
மொழிந்தார்.
மனைவியும் எழுந்து சென்ருள்.
அதற்கென்று காத்துக்கொண் டிருந்
ததுபோல, உடனே சீனு அவரண்டை
வந்தான்.
மிக வாடிய முகத்துடன் “அப்பா”
என்ருன்.
“என்னடா கண்ணே” என்ருர்.
“ஒரே ஒரு சேதி ஒங்கிட்டச் சொல்
லணும்பா” என்ருன்.
“அதென்ன? தாராளமாகச்
சொல்லு”
“நீ கோச்சுக்கக் கூடாது”
“இல்லை, கோபித்துக் கொள்ள
வில்லை.”
“வந்து — — உன் அலமாரியைச்
கொடஞ்சேன்.”
“ஓஹோ! உன் விஷமத்தனம்
ஜாஸ்தியாகப் போய்விட்டது போ
லிருக்கிறது” என்று கடிந்துகொள்வது
போல் அய்யர் ஆரம்பித்தார்.
சீனு சிறிதும் தடுக்கப்படாதவனய்
“பாத்தியா, இப்போதான் கோச்சுக்க
லேன்னே. அதுக்குள்ள கோச்சுக்
கறயே?”
“இல்லையில்லை; மேலே சொல்லு.”
“வந்து அதிலே என்னவோண்ணு
இருந்து. அதைக் கண்ணிலே வச்சுப்
பார்த்தேன். தூரக்கே யிருந்ததெல்
லாம் பெருசாத் தெரிஞ்சுது.”
“என் பைனகுலருன்ன”
“என்னபேர் அதுக்கு?”
“மேலே சொல்”
“அதிலே அத்தான் சாமா வாத்து
ஜன்னலைப் பாத்தேன். அங்கே
என்ன நடந்தின் டிருந்தது தெரியு
மா”
“சொல்.”
“அத்திம்பேர் அத்தயெப் போட்டு
அடிச்சுண் டிருந்தா. அத்தே வாயே
விட்டு கத்தினப்போலேருந்தது. அப்
பறம் எதையோ கழுத்திலேந்து கழட்
டிக்கொடுத்தா. அது சங்கிலியோ, அட்
டிகையோனு சரியாத் தெரியலே”
என்று சொல்லி முடித்தான்.
அருணசலய்யர் மௌனமா யிருந்
தார். அவரது மனத்தில் எண்ணங்
கள் குமுறிக்கொண் டிருந்தன. தம்
தங்கையின் கணவனின் நடத்தைகளைத்
தெரிந்துகொண் டிருந்தார். அவன்
குதிரைப் பந்தயத்திலேயே தன் பூஸ்
திதி முழுவதும் இழந்தவன். அவன்
செய்கையைச் சீனு சொல்லக் கேட்ட
தும் அவர் மனத்தைக் கலக்கியது. தன்
அருமைத் தங்கையும் துன்பத்துக்
காளாக வேண்டுமோ!
“அப்பா” என்று கூப்பிட்டான் சீனு.
பதில் வரவில்லை.
“தூங்கிப் போய்ட்டியா? அம்மா
கிட்டப்போய்ச் சொல்றேன்” என்று
சொல்லிக்கொண்டே கீழே ஓடினன்.

* * *

மறுநாள் தெரு மூலையில் சாமா
வென்னும் சிறு பையன் யார் வர
வையோ எதிர்ப் பார்த்துக்கொண்டு
நின்றுகொண் டிருந்தான்.
அப்பொழுது சீனுவும் தூரதிருஷ்
டிக் கண்ணடியைக் கழுத்தில் மாட்டிக்
கொண்டு வந்தான்.
“அதென்னடா அத்தான்” என்று
ஆவலுடன் கேட்டான்.
“அதா. ஒரு பூதக்கண்ணடி.
தூரக்க இருக்கிறதெல்லாம் பெருசாத்
தெரியும்”
“அது ஒங்க அப்பாதுன்ன”
“ஆமாம். அவருக்கு இம்மே இது
ஒபயோகப்படாதாம். எனக்குக் கொ
டுத்தூட்டார்” என்று ராமு பதில்
சொன்னன்.
உடனே இருவரும் அதை அநுப
விப்பதில் உலகத்தையே மறந்தனர்.—

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம் : 41, பிராட்வே

4, சல்லியன்ஸ் கார்டன்,
மயிலாப்பூர்.

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் உலர்த்தித் தர வேண்டுமா? சாயம் கெடாமல் வெளுத்துக் கொடுக்க வேண்டுமா? வேண்டுமானல், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளைப் போடுங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவச சலவை.

இந்தியாவில் மிகச் சிறந்தது

7
அளவுகள்
1, 2, 4, 6, 8, 12, 16
பேர்களுக்கு
ரூ. 10, 14, 18, 23, 29,
35, 41.
சிலோனில் முக்யமான
ஊர்களுக்கு ஏஜண்டு
தேவை.
!

சகல விதமான சமையலுக்கும் சர்வ சம்மதமாய், செலவுச் சுருக்கம் சிக்கனம், செம்மை உணவு ருசி, முதலிய எல்லா மௌகரியங்களும் பொருந்திய தெனச் சிறந்து விளங்கும்
ருக்மணி குக்கர்
சமையலடுக்கு உங்களுடைய வீட்டிலிருக்க வேண்டாமா?
விபர புத்தகம் இனம்.
ருக்மணி குக்கர் கம்பேனி
இராயபுரம்.(10), சென்னை.

அன்பெனும் விளக்கு

(“ரங்கத்”தின் பதில்.)

எனதன்பான ராஜம்,

சொன்னால் நம்பமாட்டாய். “குற்றம் செய்ததையும் செய்துவிட்டு, என்னைப் புகழ்ந்து, தப்பித்துக்கொள்ள நினைக்கிறாயா?” என்று புன்னகை புரிவாய். ஆனால், உண்மை என்னவோ, உன் கடிதங்களுக்குப் பதிலெழுதுவது அவ்வளவு எளிதல்ல. நீ எழுப்புகின்ற பிரச்னைகள் மிகவும் சிக்கலானவை; என் அறிவோ சாதாரணமானது. வானத்தைக் காண்பித்து, “அதோ பார், நீல மலர்; கொண்டுவா அதன் தேனை!” என்று வண்டினிடம் சொல்லிப் பார். அது மயங்கினால், “‘ராங்கி’யுள்ள வண்டே! பேசாம லிருக்கிறாயே!” என்று சொல்வாயோ?

பொன்னம்மையின் கடிதத்தைப் படித்தேன். ஐயோ, அந்த ஏழை என்னபாடு படுகிறாளோ! பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தால் இப்படித் தவிப்பாளா என்று நினைக்கிறாய்.

பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டோம் என்று வைத்துக்கொள். ஒரு ஆண்பிள்ளையின் உள்ளத்தை ஒரு பெண்ணுக்கு எந்தச் சட்டம் உரிமையாக்கும் என்று நான் கேட்கிறேன். பொன்னம்மையின் கடிதத்தை ஆழ்ந்து கவனித்தாயா? அவள் மனத்திலே இரண்டு ஆவல்கள் புயலென வீசுகின்றன. ஒன்று: குழந்தைகளுந் தானும் உணவிற்குத் தவிக்காமல் இருக்கவேண்டும் என்பது. மற்றொன்று: தன் கணவன் தன்னை முன் மாதிரி ‘கண்ணுக்குக கண்ணாய் வைச்சிருக்கவேணும்’ என்பது. எந்த ஆவல் உண்மையில் வலிமையுள்ளது என்று நீ நினைக்கிறாய்? இரண்டாவதுதான். பொன்னம்மைக்குச் சொத்திற் பாதியைக் கொடுத்துப் பார். அவள் நகைகள் போனவழியே, சொத்தும் போய்விடும் என்பது என் நம்பிக்கை.

இங்கே பார்! பொன்னம்மையைப் பற்றிப் பேசுகிறாயே, இதாலிய ஓவியக்காரன், ஆந்திரியா தெல் ஸார்தோவை மறந்து விட்டாயா? அவனைப்பற்றி, ஆங்கிலக் கவிஞன் ப்ரௌனிங் எழுதியுள்ள உருக்கமான கவியையுமா மறந்து விட்டாய்? அழகன்; ஓவியக் கலையிலே நிபுணன்; பெரும் புகழ் படைத்தவன்; தன் வாழ்க்கையையும், அதன் ஒளியான தன் கலைத் திறனையும் அன்பென்னும் சங்கிலியால் கட்டி, தன் மனைவி லுக்ரீஷியாவுக்கு அடிமைப்படுத்தியவன். இம்மாதிரியான கணவனைப் பெறவேண்டுமென்று எவ்வளவு பெண்கள் தவம் செய்யமாட்டார்கள்? லுக்ரீஷியா! அவளை நினைக்கவே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. ஏனம்மா அவள் பிறனை நினைந்து ஸார்தோவின் மனத்திலே தீயிட்டாள்? பொன்னம்மையின் கணவனுக்கும், லுக்ரீஷியாவிற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது, நீதான் சொல்லேன். மனித உள்ளத்தை யாரால் முழுவதும் அளக்கமுடியும்; யாரால் முழுவதும் வாங்கமுடியும்?

இதை நினைக்கும்பொழுதுதான், ராஜம், நான் இப்போது அனுபவிக்கும் இன்பங்கூடக் காலைப் பனிதானோ என்று தோன்றுகிறது. குழந்தை கண்ணன் இதோ கட்டிலில் தூங்குகிறான்; ஓடிப்போய் முத்தமிட்டால் தூக்கம் கலைந்துவிடுமே என்று பேசாமலிருக்கிறேன். அவர் வெளியிலே போயிருக்கிறார். வரும் நாழிகை ஆகிவிட்டது. இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள் வந்துவிடுவார். அவருடைய புன்சிரிப்பும், விளையாட்டுப் பேச்சும், அன்பு ததும்பும் விழிகளும் என் முன்னே நிற்கின்றன. ஆனால்................ஆனால், ராஜம், என் கண்ணனும், கணவனும் என் அன்பு வலைக்குள் அகப்பட்டு வெளியுற நினைக்கும் பக்ஷிகளா, அல்லது, எங்கள் மூவர் உள்ளமும் பரஸ்பர அன்பு ஒளியிலே ஒரே மாதிரி மலரும் மலர்களா? என்னவென்று சொல்வது? இளமையும், அதன் அழகும், வசீகர சக்தியும் உலகத்திலே, எப்பொழுதும், நிரந்தரமாக உள்ளன; என்னிடம் எவ்வளவு நாள் இருக்குமோ? அன்பு உண்டாவது இவையாலா? உண்டானாலும், ஊன்றி வளர்வது இவையாலா? பகல் முழுவதும், ஒருவர்பின் ஒருவராக நடக்கின்றோம் இருவர்; இரவு வந்ததும், ஒருவர் கையை ஒருவர் பற்றி நெருங்கி நடப்பதல்லவா முறை? இரவு வந்ததும் மின்மினி பொன்றை இருவரில் ஒருவர் பின்பற்றினால்? விருத்தாப்பியம் என்ற இரவு வருகிறது; என்ன நடக்கும் என்பதை யார் கண்டது? அன்பெனும் விளக்கை அவியாமல் காக்க வேண்டியதைத் தவிர வேறென்னதான் செய்வது?

நீ எழுப்பிய பிரச்னை, என் சிந்தனை முழுதையும், மேகம் நிறைந்த வானம்

கேசவர்த்தினி

மயிர் உதிர்வதை நிறுத்துவது.

வழுக்கை செம்பட்டை இளநரைகளைப் போக்குவது.

கூந்தலை நீண்டு செறிந்து வளரச் செய்வது.

விலை அணா 12. மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை, லஸ், மயிலாப்பூர்.

போல் கவிந்துகொண் டிருக்கிறது. இதிலிருந்து 'முடிவு' என்னும் தேனை எவ்வாறு கொணர்வேன் ?

* * *

இதை எழுதி முடிக்கும்பொழுது, கதவு ஓசைப்பட்டது. அவர் உள்ளே வந்தார்.

"என்ன எழுதுகிறாய் ?" என்றார்.

"ஒன்றுமில்லை. நான் பதிலெழுதுகிறதே இல்லை என்று ராஜம் வருத்தப் படுகிறாள். ஒரு கடிதம் எழுதினேன்" என்றேன்.

"நான் பார்க்கலாமா ? ரகசியம் ஒன்றுமில்லையே ?" என்று நகைத்தார்.

ஒன்றும் பேசாமல் கடிதத்தை அவர் கையிற் கொடுத்தேன். சிரித்துககொண்டே, தனக்குள் வாசிக்கத் தொடங்கினார்.

சிரிப்பு மாறியது. முகத்திலே சிந்தனை தோன்றியது. புருவத்தை நெறித்தார். அவர் புருவத்தை நெரிக்கும் போதெல்லாம்; நெற்றியை மெதுவாகத் தடவி அந்தச் சுருக்கத்தை நீக்கலாம் என்று எனக்குத் தோன்றாமலிராது.

கடிதத்தைக் கீழே நழுவ விட்டு என்னை நோக்கினார். நான் புன்னகை கொள்ள முயன்றேன். ஆனால் அவர் முகத்தில் தோன்றிய கனிவும் பரிவும் துயரமும், (ஆம், துயரந்தான் அது !) என் முயற்சியைத் தகர்த்தன. என் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. என் குருட்டுப் பயமும், கோழை வார்த்தைகளும் அவர் மனத்தைக் காயப்படுத்தி விட்டனவோ என்று கலங்கினேன். என் முகத்தில் இது வெளியாகி இருத்தல் வேண்டும். அன்பும், கனிவும, பொங்கிய, மெல்லிய குரலில்,

"அசடே ! அசடே !" என்றார்......

மாறா யௌவனம் பெற்ற அன்பென்னும் வானவன், எதற்காக, ராஜம், பயம் என்னும் அந்தக் கறுப்புப் போர்வையால் சில சமயம் போர்த்திச் செல்லவேண்டும் ?...............

உன் அன்புள்ள,

ரங்கம்.

கட்டைவண்டிக் குப்பன்

'ஜோதி'

1. கட்டைவண்டிக்குப் பன்பெயர்சொலக் கவலையொடிடும். நெஞ்சிலே
இட்டமேவிய அவன்செய்காரியம் இனித்திருக்குது. சொல்லுவேன்.
துட்டனல்லன்,பொய் பேசுவானலன், சோம்பலேஅறி யாதவன்,
மட்டிலாதநல் இன்பவாழ்வவன் மனையிருப்பது காண்பிரால்.

2. பழையவண்டியொன் றிரண்டுமாடுகள் பகரின்அன்னவன் உடைமையாம்.
விழைவினோடுபல் பாரம்ஏற்றியே வேற்றூர்மேவி இறக்கியே
பிழையிலாதுரி யார்க்குச்சேர்த்திப்பின் பிரியமோடவர் தரும்பொருள்
தழைமகிழ்ச்சியி னோடுபெற்றிடு வான். இதேஅவன் றன்செயல்.

3. ஊரிலுள்ளவர் நம்பியேசரக் குள்ளபாரம் இவன்றன்பால்
சேரவைத்திவன் குறித்தவூரினிற் சேர்த்தல்கண்டு மகிழ்குவார்.
நேரில்அன்னவர் இவனைநம்பி நிகழ்த்துவார்செயல் ; குப்பனோ
யாரைநம்பினன் அறிதிரோ ?இரண் டெருதைநம்பி இருப்பனால்.

4. ஈதுபொய்யிலை— மாலைவேளையில் இரண்டுகாளைக்கும் தவிடுவைத்
தோதும்அன்பினில் முதுகுதடவியே உற்றபாரங்கொள் வண்டியில்
தீதிலாவகை பூட்டிஓட்டுவன். செறியிருட்டினில் சாலையில்
ஏதும்அச்சமின் றுதலின்வண்டி இழுத்துச்செல்லும் அவைகளே.

5. வண்டிக்கீழொரு விளக்குத்தொங்கும்;அம் மங்கலான வெளிச்சமே
கொண்டுசாலையிற் போகும்காளைகள்; குப்பன்தூங்குவன். மாடுகள்
மிண்டுசெய்வதும் சாட்டைமுறிவதும் வினவின்அவனறி யாதன.
தொண்டுசெய்வதிந் நெறியிலுற்றிடின் துயரம்ஏதுலகத்திலே?

6. சோறுசமைக்கவும் தண்ணீருற்றவும் சுகித்திருக்கவும் சொந்தத்தில்
கூறும்மாமன்றன் மகளினைக்கட்டிக் கொண்டான்;அன்னவள் குப்பனுக்
கேறுமாறு சொலாதவள்,அவன் இட்டதேசட்டம் என்பவள்.
பேறுவேறினிக் குப்பனுக்குள தென்னில்இல்லையென் பேனரோ!

பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்கு உதவுங்கள்!

ஜவஹர் கடிதம்

[பண்டித ஜவஹர்லால்நேரு ஆறு வருடங்களுக்கு முன்னே தமது குமாரி இந்திராவுக்கு வரிசையாகச் சில கடிதங்களெழுதினார். அவைகளெல்லாம் ஒரு புத்தகமாக வெளிவந்தண. 1931, 32, 33-ம் வருஷங்களில் பண்டிதர் சிறைவாசத்தி லிருந்த போது இன்னும் சில கடிதங்களைத் தமது குமாரிக்கு வரைந்தார். அக் கடிதங்களின் மொழி பெயர்ப்புகள் ஹிந்தி, உருது, குஜராத்தி முதலிய பாஷைகளில் வெளியாவதற்கு ஏற்பாடாகி யிருப்பதாக, இந்தக் "கடைசிக் கடிதத்தை வெளியிட்டுள்ள "மாடர்ன் ரெவியூ" பத்திராதிபர் கேள்விப் பட்டாராம். தமிழில் அந்தக் கடிதங்கள் வெளிவர வேண்டாமா? யார் வெளியிடப் போகிறார்கள்? அந்தக் கடிதங்களின் அழகைத் தமிழர் அறிவதற்காக, கடைசிக் கடிதத்தின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

—சங்கு ப-ர்.]

குழந்தாய்! பெரிய கதை முடிகிற தருணம். உனக்கு இனி இத்தகைய கடிதம் எழுத வேண்டியதில்லை. ஆனால் எதையும் முடிக்கும்போது கம்பீரமாக முடிக்கவேண்டு மென் றிருப்பதால் ஒரே ஒரு கடைசிக் கடிதம் மட்டும் எழுதிவிட்டு நிறுத்திக் கொள்கிறேன்.

*　　*　　*

19-வது நூற்றாண்டில் பெஞ்சமின் தெசரலி என்று ஓர் ஆங்கில ராஜ தந்திரி இருந்தார். அவர் எழுதினார்: "நாடு கடத்தப்பட்டவர்களிலும், காவலில் வைக்கப்பட்டவர்களிலும் வாடி வாடி வதங்குபவர் அநேகர். ஆனால் கல்விமான்களோ அந்தக் காலத்தைத் தான் சுவை மிகுந்த வாழ்க்கையாக்கிக் கொண்டுவிடுவார்கள்." டச்சு வேதாந்தியான ஹியூகோ கிரோஷியஸ் என்பவர் ஜன்மாந்திரக் காவல் தண்டனை தரப்பட்டுச் சிறையில் கிடந்து இரண்டு வருடங்கழித்து வெளிவர நேர்ந்தது. அந்த இரண்டு வருடத்தையும் அவர் வேதாந்த விசாரத்திலும் இலக்கியச் சுவையிலும் காலங்கழித்த கதையைச் சொல்ல வந்த விடத்தில்தான் பெஞ்சமின் தெசரலி மேற்படி வாக்யங்களைச் சொன்னார். எத்தனையோ சிறைப்பட்சிகள் இலக்கியச் சுவையில் களித்ததாக உலக சரித்திரம் கூறும். டான்குவிக் ஸோட் என்ற கதையை யெழுதிய ஸர் வாண்டி என்ற ஸ்பானியன், 'பக்தனின் யாத்திரை' என்ற நூலை யெழுதிய ஜான் பனியன் முதலியவர்களின் வாழ்க்கை சிறந்த உதாரணங்களாகும்.

*　　*　　*

பழைய காலத்துச் சரித்திரத்திலுள்ள சில துணுக்குகளையே நான் இதுவரை கூறிவந்தேன். இதிகாஸத்தில் உனக்கு இஷ்டமிருந்தால் உலகில் அது சம்பந்தமான புத்தகங்கள் பல உள. பழையகாலத்து வாழ்வை அவைகளினின்று அறிந்து கொள்ளமுடியும். சும்மாப் புத்தகங்களைப் படிப்பது மட்டும் போதாது. பழமையைப்பற்றிப் பூர்ணமாக அறிந்து கொள்வதற்குத் தாராள நோக்கமும் தெளிந்த அறிவும் வேண்டும். ஆதிகாலத்திலே யிருந்த ஒரு மனிதனைப்பற்றி அறியவேண்டுமானால் அவன் இருந்த வாழ்வென்ன, அவனைச் சுற்றி எவ்வாறிருந்தது, அவனது அறிவில் என்னென்ன தோன்றின என்பனவற்றையெல்லாம் நாம் கருதவேண்டும். இப்போதுள்ள இந்த நிலைமையில் அவர்களையும் வைத்துக் கவனிக்கலாகாது; நாம் நினைப்பது போலவே அவர்களும் நினைத்தார்களென எண்ணலாகாது. உதாரணமாக, இந்தக் காலத்தில் அடிமை வாழ்வை ஆதரிப்போரே இல்லையல்லவா? ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னே பிளேதோ என்ற பெரியார், "அடிமைகள் இருக்கவேண்டியது அவசியம்" என்று கூறிச் சென்றார். அடிமைத்தனம் இருக்க வேண்டுமென்பதற்காகச் சில வருஷங்களுக் கு முன்னே அமெரிக்காவில் ஓர் பலத்த போர் நடந்ததைப்பற்றி அறிந்திருக்கலாம். ஆகவே தற்கால வாழ்வின் ரீதியை யொட்டி முற்கால வாழ்வை ஆராய்ச்சி செய்யலாகாது. இதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் முற்கால வாழ்வின் ரீதியை யொட்டித் தற்கால வாழ்வையும் நிர்ணயிக்கக்கூடாது என்று கூறினால், சிலர் அதை ஆட்சேபிப்பார்கள். உலகில் அநேக மதங்கள் தோன்றி அந்தந்தக் காலங்களுக்கேற்ப நம்பிக்கைகளையும் வழக்கங்களையும் ஏற்படுத்தி அந்தந்த நாடுகளில் உபயோகப்படுத்தி வந்தன. ஆனால் அவை தற்காலத்துக்கு உபயோகப்படுவன வென்னலாமா?

*　　*　　*

சரித்திரத்தில் எவ்வளவோ விசேஷமான காட்சிகள் ஒவ்வொன்றாய் நம் மனக் கண்முன்னே ஓடுகின்றன. எகிப்து—பாபிலோன்—நினேவா—இந்தியாவின் பழைய நாகரிகங்கள்—இந்தியாவுக்கு ஆரியர்களின் வருகை—ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் ஆரியர்கள் பரவுதல்—சீன தேசத்துக் கலை வளர்ச்சி—கிரேக்கர்களின் ஆவேசம்—ரோமரின் சாம்ராஜ்யம்—இரண்டு கண்டத்திலும் அரேபியர்கள் படையெடுத்தல்—இந்தியாவில் கலை வளர்ந்து தேய்தல்—அமெரிக்காவில் மாயா, அஸ்டெக் முதலிய நாகரிக வளர்ச்சிகள்—மங்கோலியர்களின் மட்டுக் கடங்காத வெற்றி--ஐரோப்பாவில் கோதிக் முறையில் கட்டப்பட்ட ஆலயங்கள்—இந்தியாவில் இஸ்லாம் நுழைந்து மொகல் ஏகாதிபத்தியம் ஓங்குதல்—ஐரோப்பாவில் புதுநாகரிகம்—அமெரிக்காவைக் கண்டு பிடித்தல்—கிழக்கு நாடுகட்கு வழிதேடல்—வர்த்தக மூலம் கிழக்கு நாடுகளை மேற்கத்தியார் அடக்கி யாளுதல்—பெரிய யந்திரங்கள் தோன்றி முதலாளித்துவம் வலுக்குதல்—தொழிற்சாலைகளின் வளர்ச்சியும் ஏகாதிபத்தியச் செருக்கும்—நவீன விஞ்ஞான ஆராய்ச்சியில் கிடைத்த அதிசய யந்திரங்கள் இத்தனையும் உலக இதிகாஸத்தில் தோன்றுகின்றன.

பெரிய பெரிய சாம்ராஜ்யங்களெல்லாம் ஓங்கி வளர்ந்து பிறகு தரைமட்டமாயின. மனிதன் ஆயிர வருடங்களில் அவைகளின் கதைகளை மறந்துவிட்டான். அவைகளின்மீது மண்மூடிவிட்டன. ஆனால் அவ்வப்போது தோன்றிய பேரெண்ணங்கள் மட்டும் வரவர வளர்ந்து சாம்ராஜ்யங்களைவிட அதிக பலமுடையவையாக வாழ்ந்து வருகின்றன.

*　　*　　*

பழைமை நமக்கு அநேக பரிசுகள் வழங்கியுளது. கலை, நாகரிகம், அறிவு சத்தியம் முதலியவைகளெல்லாம் பழைமை நமக்குத் தந்த பரிசுகள் தான். இதற்காக நாம் பழைமைக்கு நன்றி காட்டக் கடமைப்பட்டுளோம். ஆனால் நமது கடமையை நாம் முற்றிலும் மறப்பதற்கில்லை. வருங்காலத்துக்காக நாம் செய்யவேண்டிய கடமைகள்

பல உண்டு. பழைமை கழிந்துபோய் விட்டது; இனி அதை மாற்றமுடியாது. வருங்காலம் இனிமேல்தான் வரப்போகிறது. அதைக் கொஞ்சமாவது நம்மால் உருவப்படுத்த முடியுமல்லவா? பழைமையில் சில உண்மைகள் புலனாகவில்லையென்று நாம் நினைத்தால் எதிர்காலத்தைப் பற்றியவைகளிலும் எவ்வளவோ உண்மைகள் பொதிந்துகிடக்கின்றன. அவைகளைச் சோதித்துத்தான் அறியவேண்டி யிருக்கிறது. ஆனால் வருங்காலத்தைக் கட்டிப் பிடித்து ஆளவேண்டுமென்று பழைமை நினைக்கிறது. அந்தச் சண்டையில் வருங்காலத்தைப் பழமையின் பிடிப்பினின்று தப்புவித்து முன்னேற்றிச் செல்லவேண்டியது நமது கடமையாகின்றது.

* * *

நம்பிக்கை, மூடநம்பிக்கை எல்லாம் பழைய காலத்தில் அரசு செலுத்தின. கல்தச்சனுக்கும், சிற்பிக்கும், ஜனங்களுக்கும் இருந்த நம்பிக்கையும் பக்தியும் திரண்டு உருவாவது போலவே கோயில்களும், மசூதிகளும் அக்காலத்தில் எழுந்தன. ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு சிற்றுளி வேலையும் அந்த ஜனங்களின் பக்தியைப் பற்றிக் கதை சொல்கின்றன. இன்றைக்கு நமக்கு அவ்வளவு நம்பிக்கை யில்லாவிடினும் ஒரு காலத்தில் இதே கோபுரங்களும், மசூதிஸ்தூபிகளும் பக்தர்களின் பிரார்த்தனைக்கு வானவழி காட்டுவன என்ற நம்பிக்கை பூர்ணமாக இருந்திருக்கிறது. ஆனால் 'நம்பிக்கை யுகம்' மறைந்துவிட்டது. கற்களில் கண்ட இந்திரஜாலங்கள் மறைந்துவிட்டன. எவ்வளவோ கோயில்களும் மசூதிகளும் பிற்காலத்தில் எழுந்தனவாயினும் ஆதிகாலத்து ஆவேசமும் பக்தியும் எழுச்சி பெறவில்லை. இன்றைக்கு ஒரு கம்பெனி ஆபீசுக்கும் கோயிலுக்கும் வித்தியாசமேயில்லை யென்னலாம்.

நாம் வாழும் இந்தக் காலமே அடியோடு மாறியிருக்கிறது. எல்லாம் சந்தேகமாகவே தோன்றுகின்றன. எதற்கும் கேள்விகளே புறப்படுகின்றன. பழைய நம்பிக்கைகளையும் வழக்கங்களையும் கைவிட்டு வருகிறோம். அவைகளில் நமக்கு நம்பிக்கையில்லை. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா எல்லாவிடத்திலும் இதே நிலைதான். ஆகவே புதிய வழிகளையும் புதிய உண்மைகளையும், காலத்துக்கேற்ற புதிய வாழ்வையும் கண்டுபிடிக்க நாம் தேடி அலைகின்றோம். என்னென்னவோ சித்தாந்தங்கள் தோன்றுகின்றன. ஆதென்ஸ் நகரில் மட்டும் கேள்விக் காலம் தோன்றியதாக ஸாக்ரடீஸ் எழுதிச் சென்றார். இப்போது உலகெங்குமே அத்தகைய புத்தி வந்துவிட்டது.

* * *

செய்கையில் ஈடுபட்டால் ஆபத்து வந்தாலும் வரக்கூடும். அதற்குப் பயந்து கொண்டு சிலர் செய்கைகளில் இறங்குவதில்லை. 'அபாயம்' என்பதைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது மிக்க பயங்கரமாகத்தா னிருக்கிறது. ஆனால் கிட்ட நெருங்கிக் கவனித்தால் அபாயமும் நமது நண்பன்தான். ஒவ்வோர் வேளையில் இன்பமூட்டும் துணையாகவும், வாழ்க்கையைச் சோபிக்கச் செய்வதாகவும் 'அபாயம்' இருக்கிறது. அப்படியப்படியே வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தால், வாழ்க்கையில் சுவை யிருப்பதில்லை. உயிரையும் திரஸ்கரித்துப் பெரியபெரிய மலைகளின்மீது சிலர் ஏறுகிறார்கள். அந்த அபாயத்தை வென்று திரும்பிவிட்டால், அவர்களுக்கு என்ன களிப்புத் தெரியுமா? சுற்றிலும் பயங்கரம் அதிகமாக ஆக அறிவு சுத்தப்படுகின்றது. வாழ்வென்பது ஓர் நூலிழையி லொட்டிக் கொண்டிருப்பது என்பதை அறிய அறிய வாழ்க்கையின்பமும் அதிகமாகின்றது.

அமெரிக்காவில் மருந்து மோசடி

பொது ஜனங்களின் உணவுப் பொருள்கள், விற்பனை யாகும் மருந்துகள் இவை சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கம் ஓர் சட்டம் தயாரித்து வருகிறதாம். அந்தச் சட்டத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்து மிஸ்டர் ஜானதன் மிட்சல் 'நியூ ரிபப்ளிக்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதி யிருக்கின்றார்.

"வாஷிங்டனிலுள்ள ஆகார ஆராய்ச்சிச் சாலையில் ஒரு சிறிய அறையில் மோசடி மருந்துகள் சிலவற்றையும், முகப் பவுடர் வகையராக்களையும், உணவுப் பொருள்கள் சிலவற்றையும் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு சாமானைப் பற்றியும் ஒரு சரித்திரமும், ஒவ்வொன்றையும் தின்றதால் எத்தனை பேர் இறந்தார்களென்ற கணக்கையும், அவைகளால் எவ்வளவு பணம் கொள்ளை யடிக்கப்பட்டது என்ற விவரத்தையும் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த அறை' சொல்லுங் கதை பயங்கரமா யிருக்கிறது. ஏதோ போலி மருந்துகளைத் தயாரித்து ஒன்றுக்கு நூறு பங்கு லாபத்தைச் சில வியாபாரிகள் கொண்டனர். பல பேர்களுடைய உயிர் நாசமானதுதான் உலகம் கண்ட லாபம்.

"உதாரணமாக: பன்பார் (Banbar) என்பது ஒரு மருந்து. பார்லெட் கம்பெனியார் தயாரித்தது. ஒரு புட்டி 12 டாலர் வீதம் விற்கப்பட்டது. நீர் ரோகத்துக்குச் சிறந்தது என்று விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் அதைச் சோதித்த போது சாதாரண இலை யொன்றின் சாறுதான் அந்தப் புட்டியி லிருந்தது. அதன் வைத்திய சக்தியோ பூஜ்யம்தான் என்று கண்டுபிடிக்கப்பட்டது. நாட்டின் சட்டம் சரியாக இல்லாததால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பன்பார் இன்னமும் விற்கப்பட்டுத்தான் வருகிறது."

"அந்த அறையின் இன்னொரு மூலையில் முகப் பவுடர் வகைரா வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பவுடர்களைத் தூவிக்கொண்டதால் கண் குருடானவர்களின் படங்கள், சொட்டை விழுந்த முகங்களின் போட்டோக்கள் எல்லாம் வைக்கப்பட் டிருக்கின்றன. 'வாஷ் கியூர்' என்ற பவுடரை உபயோகித்துக் கஷ்டப்பட்ட ஓர் யுவதியின் படமும் மாட்டப்பட் டிருக்கிறது. அந்த மருந்தை விற்று ஒரு கம்பெனி ஏராளமாக லாபம் அடைந்ததாம்.

"சாப்பாட்டுச் சாமான்கள் விஷயத்தில் வியாபாரிகள் செய்யும் மோசடி வஸ்துக்கள் இன்னொரு புறத்தில் வைக்கப்பட்டுள. வெறும் காற்றை உள்ளே விட்டு இரண்டு பங்குபோல் அளவு காட்டப்பட்டு விற்கப்படும் வஸ்துக்கள், எதையோ டப்பியிலடைத்து அதை ஓர் வகைப் பழம் என்று விளம்பரம் செய்த மோசடி, இதெல்லாம் காட்டப் பட்டிருக்கின்றன."

வல்லரசுகள் சதுரங்கம்

(சாணக்கியன் தொகுத்தவை.)

பிரான்ஸும் ஜர்மனியும்

ஐரோப்பிய மகாயுத்தம் முடிவடைந்தவுடன் உலகம் ஒரே விதமாகவே எண்ணிற்று. இனிமேல் பிரான்ஸும் பிரிட்டனும் நிரந்தர நேசத்தோடே வாழுமென்று உலகோர் எண்ணினர். பிளாண்டர்ஸ் படுகளத்தில் பிரஞ்சு ரத்தமும் பிரிட்டிஷ் ரத்தமும் ஒருங்கேயோடிற்றே அந்த ரத்தபாசம் எளிதில் மறைந்து விடுமா? அதைத் தவிர, ஜர்மனியிடம் யார் அதிக நட்புக் கொண்டு விடுவார்கள்? "ஜர்மனிக்காரனோ! பிசாசோ!" என்ற அபவாதமொழி ஐரோப்பாவில் இன்னும் மறையாதிருந்து வருகின்றதன்றோ.

யுத்தம் முடிந்த பின்பு பிரான்ஸு தனது காலை யூன்றிச் சக்தி சேகரித்துக் கொள்ள ஆரம்பித்தது. சுற்றிலுமுள்ள சின்னச் சின்ன ராஜ்யங்களோடு ஒப்பிடும்போது பிரான்ஸ் அடைந்த முன்னேற்றம் வெகு வேகமானதுதான். அதன் அரசியல் கவுரவமும், பொருளாதார நிலையும், ராணுவ பலமும் தினே தினே விருத்தியடைவது கண்டு, ஒரு சில பிரிட்டிஷாருக்கு மட்டும் ஏதோ சந்தேகம் ஏற்பட்டது. ஆகவே, சிலர் இனி ஜர்மனியிடம் பிரியம் காட்டுவது என்று தீர்மானித்து விட்டனர். உதாரணமாக, பிரஸித்தி பெற்ற ராஜதந்திரியான லாயிட் ஜார்ஜைத்தான் கவனிப்போமே. அவருக்கு என்ன காரணமோ பிரான்ஸிடம் அவ்வளவு பற்றுதலில்லை. ஜர்மனியிடம் என்னவோ அவருக்கு ஒரு அன்பு. ஜர்மனிக்கும் பிரான்ஸுக்கும் எவ்வளவோ விஷயங்களில் அபிப்பிராய பேதமுண்டு. 'ஜர்மனியில் இவ்வளவுதான் இராணுவ மிருக்கலாம்' என்று கட்டுப்பாடு செய்ய வேண்டு மென்பது பிரான்ஸின் ஆசை. ஆனல் இழந்த தனது பழைய இராணுவ பலத்தை மீண்டும் சேகரிப்பதிலேயே ஜர்மனிக்குச் சிரத்தை.

ஜர்மனியும் இத்தாலியும்

தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஜர்மனி சுற்று முற்றும் பார்த்து இத்தாலியிடம் சிநேகம் பாராட்டத் தலைப்பட் டிருக்கிறது. ஐரோப்பாவில் இன்றைக்கு இத்தாலியிடம் இராணுவ பலம் அபரிமிதமாயுளது. அருகிலுள்ள பிரான்சை மிஞ்ச விடலாகாதென்ற கொள்கை இத்தாலியருக்கு உண்டு. இத்தாலிய தேசத்துக்கு அருகில் மத்திய தரைக்கடல் இருக்கின்றதல்லவா—அதன் வழியாகத்தான் உலகத்தின் பெரும்பாலான வியாபாரக் கப்பல்கள் செல்ல வேண்டும். அந்தக் கடலின்மீது பூரண ஆதிக்கம் அடைய வேண்டுமென்பது இத்தாலியின் விருப்பம். இத்தாலியின் ஆகாய விமானப் படையும் ஏராளமானது. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள சிறு நாடுகளில் பிரான்ஸுக்கு அதிகச் சலுகை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதிலும் இத்தாலிக்கு அக்கரையுண்டு. நாளுக்கு நாள் இத்தாலிக்கும் ஜர்மனிக்கும் உள்ள உறவு அதிகமாகி வருவதைக் கண்டு உலகம் அதிசயிக்கின்றது. ஜர்மனியின் நாஜி இயக்கம், இத்தாலியின் F—ஆஸிஸ்டு இயக்கம், இந்த இரு இயக்கங்களும் ஒரு கருத்தினின்று வெடித்தெழுந்த எரி மலைகள் என்றே சொல்ல

வேண்டும். இத்தாலியின் சர்வாதிகாரி முஸ்ஸோலினி; ஜர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர். சர்வதேசச் சங்கத்தில் பிரான்ஸுக்கு அதிக ஆதிக்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதில் இந்த இருவர்களுக்கும் மிக்க அக்கரையுண்டு.

பிரிட்டனின் ஆசைகள்

இந்த நிலையில் பிரிட்டன் என்ன செய்யும்? பிரிட்டிஷ் இராஜ தந்திரிகளில் சிலர் இத்தாலியை நயிச்சியம் செய்து கொள்வது அத்தியாவசிய மென்பதைக் கண்டறிந்தார்கள். இத்தாலியின் உதவி மட்டும் பூர்ணமாகக் கிடைத்து விட்டால், ஐரோப்பாவில் சர்வசக்திமானகத் தான் விளங்கலாமென்பது பிரிட்டனின் எண்ணம்.

(சென்ற வருடத்தில் பிரிட்டிஷ் பிரதமமந்திரி மாக்டனால்டு கடல் தாண்டிச் சென்று முஸ்ஸோலினியைக் கண்டு உறவாடியதற்கு இதுதான் காரணம்.)

ருஷியாவின் நிலை

ஜர்மனியில் புதிய ஆவேசம் அதிகமாகி வருவதைக் கண்ட பிரான்ஸ் தனக்கு ஒரு வல்லரசின் நட்பு வேணுமென்று நினைப்பது சகஜமே. ஆகவே அது ருஷியாவை நாடிற்று. இதே சமயத்தில் ருஷியாவின் நட்பை அமெரிக்காவும் நாடிற்று. ருஷியாவின் சிநேகிதத்தை

—ஹி. டைம்ஸ்.

அமெரிக்கா விரும்புவதற்கு வேறு காரணமும் இருக்கின்றது. அருகிலுள்ள ஜப்பானின் இராணுவத் திமிர் கொழுத்து வருவதை எத்தனை நாளைக்கு வளரவிடுவது? ஆகவே, அமெரிக்கா தற்காப்புக்காக ருஷியாவின் நட்பை நாடிற்று. இப்படி எல்லோரும் ருஷியாவை நாடும்போது பிரிட்டன் மட்டும் சும்மாவிருக்கலாமா? ஸோவியத் ருஷியாவுக்கும் இங்கிலாந்துக்கும் வியாபார ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பூர்வாங்கங்கள் நடைபெற்றன, ஆனால் அதற்குமேல் பிரிட்டன் சிரத்தை காட்டவில்லை. இத்தாலியின் நட்பை முதலில் சம்பாதிக்கவேண்டும் என்பதிலேயே பிரிட்டிஷார் கண்ணுங் கருத்துமாய் விட்டனர். "ஸர் ஜான் ஸைமன் புதுவருடப் பிறப்பின்போது முஸ்ஸோலினியோடு உறவாடச் சென்றது அரசாங்க நட்புக்காகத்தான்" என்று ஹிந்துஸ்தான் டைம்ஸின் ஐரோப்பிய நிருபர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். நிற்க,

ஜப்பானுடைய போக்கு

போன மாதத்தில் ஜப்பானின் அந்நிய நாட்டு மந்திரியான ஹிரோட்டா என்பவர் ஓர் பிரசங்கம் செய்தார். வல்லரசுகளின் சதுரங்கத்துக்கு அந்தப் பிரசங்கம் இன்றியமையாததாகும். பட்டதும் படாததுமாக அவர் ஏதேதோ பேசியிருந்தாலும், அதில் அநேக துரைத்தனங்களை எச்சரிகை செய்தேயிருப்பதுபோலச் சிலருக்குத் தொனிக்கிறது. அதே சமயத்தில் ஜப்பானின் மகாமாத்தியனாக இருந்த ஜெனரல் அராக்கி தனது ஸ்தானத்தை இராஜீனாமாச் செய்திருப்பதையும் உலகம் கவனிக்காது போகவில்லை.

ஜப்பானில் இரண்டு கட்சிகள் உண்டு. எப்போதும் இராணுவ பலத்தைப் பிறர்மீது பிரயோகித்து ஜப்பானின் சவுரியத்தைக் காட்டிக்கொண்டேயிருக்க வேண்டுமென்பா ஒரு கட்சியார். எல்லோரும் சமாதானமாக ஒப்பந்தங்கள் செய்துகொண்டு வாழவேண்டுமென்பர் இன்னொரு கட்சியார். இப்போது ஜெனரல் அராக்கி இராஜினாமா செய்திருப்பது முதற்சொன்ன கட்சியாருக்குப் பல ஹீனம் ஏற்பட்டது போல்தான். ஆனால் எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ யார் கண்டது?

ஜப்பானும் ருஷியாவும்

கிழக்கு ஆசியாவில் ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் ஏற்பட்டுள்ள தகராறுகள் எளிதில் தீரக்கூடியன அலல. கிழக்குச் சீனா-ரயில்வே ருஷியாவுக்குச் சொந்தமானது. அதை விலைக்கு வாங்கிக்கொள்கிறீர்களா வென்று ஜப்பானை ருஷியா கேட்டது. விலை கொடுத்து வாங்குவதைவிட இனாமாக அடைவதில்தான் ஜப்பானுக்குப் பிரியம். ருஷியாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு வியாபார ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள வேண்டுமென ருஷியா பிரேரித்ததுண்டு. ஆனால் அந்த யோசனையையும ஜப்பான் உதறிவிட்டது. "இரண்டு நாடுகளும ஒன்றையொன்று தாக்குவதில்லை யென்ற ஓர் ஒபபந்தத்தைச் செயதுகொள்வோம்" என்று ருஷியத் தலைவன் கிரம்லின் ஓர் ஆலோசனை கொண்டுவந்தான். ஜப்பானின் இராணுவத் தலைவர்கள் அந்த ஆலோசனையையும் புறக்கணித்து விட்டனர். இதையெல்லாம் கண்டு ஸோவியத் ருஷியா தன் காரியத்தில் கண்ணாகிவிட்டது. தனது இராணுவ பலத்தையும் ஆகாய விமான பலத்தையும் அதிகமாக்கிக் கொள்வதிலும் அமெரிக்கா, பிரிட்டன் முதலிய வல்லரசுகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொள்வதிலும் முனைந்திருக்கிறது.

சென்ற வருடம் நவம்பர் மாதம் பதினோராம் தேதியன்று ஓா சம்பவம் நேரிட்டது. சில ஜப்பானிய ஆகாய விமானங்கள் ஸைபீரியாவின் மேலே பறந்து சென்றனவாம். அவ்வளவுதான்; உடனே ருஷியா ஜப்பானுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தது. "இனிமேல் ஜப்பானிய ஆகாய விமானங்கள் இவ்வாறு பறந்தால் எச்சரிக்கையின்றிச் சுட்டுப் போடுவோம்'

என்று காரமாகச் சொல்லிற்று. இந்தக் கார வார்த்தைகளை உணர்ந்துகொள்ள ஜப்பானியன் அறியானா?

ஜப்பானும் சீனவும்

சமீபத்தில் ஹிரோட்டா அவர்கள் பேசிய பேச்சில் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல உண்டு. "வட சீனவில் சட்டமும் அமைதியும் நிலவுமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது ஜப்பானுக்கு அத்தியாவசியமாகும்" என்று அன்று ஹிரோட்டா கூறினர். இதற்கென்ன அர்த்தம்? சீனவின் விஷயங்களில் ஜப்பான் தலையிடாதிருக்க முடியாதென்பது தானே அர்த்தம். வடசீனவில் மஞ்சுகோ என்று ஒரு இராஜ்யத்தைச் சிருட்டித்து அதற்கு ஒரு பொம்மை அரசனையும் தயாரித்து வைத்து என்னென்னவோ லீலைகளையெல்லாம் ஜப்பான் செய்திருக்கிறது. சீனவின்மீது சில காலத்துக்கு முன்னே ஏறி மிதித்த அந்தத் திமிர் ஜப்பானிடமிருந்து அகலவில்லை. வெகு கம்பீரமாகத்தான் ஜப்பான் உலகை நோக்குகின்றது.

சர்வதேசச் சங்கத்தினின்று அபிப்பிராய பேதங்கொண்டு ஜப்பான் விலகியதற்குக் காரணம் சீன ஜப்பானியத் தகராறுதான். இன்றைக்காவது சீன, ஜப்பானுக்கு அடங்கி நடக்கத் தயாராயிருக்கிறதா வென்று அன்று ஹிரோட்டா ஜாடையாகக் கேட்டிருக்கிறார். சீனவுக்கு வேறு வழியில்லை. அதை சர்வதேச சங்கம் கைவிட்டு விட்டதென்னவோ வாஸ்தவம். மேனாட்டு அரசாங்கங்கள் தித்திக்கப் பேசினவேயன்றி உதவி செய்ய ஒரு அரசாங்கமாவது விரலைக்கூடத் தூக்கவில்லை. சீன என்ன செய்யும்? மனதில் வைரத்தை வைத்துக்கொண் டிருந்தாலும் ஜப்பானேடு நட்புரிமை பாராட்டத் தொடங்கினலும் தொடங்கும்.

—ஹி. டைம்ஸ்.

ஆனல் சீனவுக்கும் ருஷியாவுக்கும் ஏதாவது நட்பு ஏற்படும் போலிருந்தால், அதைக் கத்தரிப்பதுதான் ஜப்பானுக்கு இப்போது வேலை.

இப்படி வல்லரசுகளெல்லாம் இன்றைக்குச் சதுரங்கம் ஆடிக்கொண் டிருக்கின்றன. ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் என்ன ஏற்படப்போகிறதென்றே உலகத்து ராஜ தந்திரிகள் கவனித்துக்கொண் டிருக்கிறார்கள்.

நீங்கள்

பூகம்பக் கஷ்ட நிவாரண நிதிக்கு உதவினீர்களா?

உங்கள் ஊரில் நிவாரண நிதியொன்று சேர்க்கக் கமிட்டி சேருங்கள்.

நீங்கள் தொழிலாளரா?
ஒரு நாள் உணவைக் கொடுங்கள்.

நீங்கள் நடிகரா?
ஒரு நாடகமாடி உதவுங்கள்.

நீங்கள் பாடகரா?
நிதிக்காகக் கச்சேரி செய்யுங்கள்.

நீங்கள் ஹோட்டல் முதலாளியா?
ஒரு நாள் வசூலைக் கொடுங்கள்.

வேறுவித உத்தியோகஸ்தராயினும் கனவானுயினும் தர்மம் செய்ய இதுதான் தருணம்.
காலத்திற் செய்த உபகாரம் கடலினும் பெரிய தன்றோ!

கடைசி அடகு

(மஞ்சேரி ஸ. ஈச்வரன் எழுதிய சிறு கதை).

(வே. ராகவனால், தமிழில் எழுதப்பட்டது.)

தெற்கே ஐஸ் ஹௌஸ் போலீஸ் ஸ்டேஷனுலும் வடக்கே வாலாஜா ரோட் போலீஸ் ஸ்டேஷனுலும் பத்திரப்படுத்தப்பட்டு, இடையே, ஓடும் டிராம் வண்டிகளின் சத்தத்தாலும், தோசைத் தட்டுகளின்மீது தோசைத் திருப்பிகளால் இடையிடையே தாள வாத்யம் வாசிக்கப்படும் டீ கிளப்புகளினாலும் நாத ப்ரும்ம ஸ்வரூபமாய் விளங்குவது திருவல்லிக்கேணி ஹை ரோட்! இதிலிருந்து கிழக்கும் மேற்குமாக அநேக சந்துகள் பிரிகின்றன. நரகத்துக்குப் போகும் குறுக்குப் பாதைகள் போன்றவை அச்சந்துகள்! இவைகளில் பொந்து பொந்தாகச் சில வீடுகள்! ஆற்காட்டு நவாபு காலத்திலிருந்து நின்றுகொண்டிருக்கும் சிரமம் தாங்காமல் தரையில் சாய்ந்து கொண்டிருக்கும் சில சிறு மாளிகைகள்!

இச் சந்துகளொன்றில் ஒரு சின்னஞ் சிறிய குள்ள வீடு. அதன் முகப்பில் ஒரு ஜன்னல் அளவே உள்ள ஒரு கடை. அதில் சாவுகார் கர்ததாஸ் தன் பரோபகாரத் தொழிலை நடத்திக் கொண்டு வந்தான். மங்கலில் எவ்வளவு ரகங்கள் உண்டோ அவ்வளவும் காணும்படி துணிகளும் பட்டுகளும் ஒரு பக்கமாய் கொடியில் இளித்துக் கொண்டு தொங்கின. ஒரு மூலையில் பச்சை ஏறின பித்தளைப் பாத்திரங்கள் குவிந்துகிடந்தன. முன் பக்கமாய் ஒரு கண்ணாடி நகைப்பெட்டி; அதற்குள் செம்புபோன்ற தங்கத்திலும், ஈயம்போன்ற வெள்ளியிலும் அற்புதமான ஆபரண விசேஷங்கள் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்தன. இவைகளுக்கிடையே கீழே விழுந்து போன தூண்கள்போலிருக்கும் நீண்ட திண்டுகள் சாத்தப் பட்டிருந்தன. அவற்றின்மேல் ஒரே கபந்தாகாரமாய் உடல் முழுதும் வயிறுகச் சாய்ந்து கொண்டு, கர்ததாஸ் தன் சிறிய தலையை சுழற்றி, தன்முன் கிடக்கும் சாமான்களைப் பார்த்தான். லேவாதேவித் தொழிலுக்கு ஒரு குறைவுமில்லை; கர்ததாவிடம் கடனுக்கு வருபவரெல்லாம், யாரென்று நினைக்கிறீர்கள்? அனைவரும் அபலைகளே!

ஒரு நாட் காலைநேரம்; கடற் கரையிலிருந்து 'சுள்' என்று காற்றடித்துக் கொண்டிருந்தது: 'பளிச்' என்று சூரிய வெளிச்சம் தோன்றாமல் எங்கும் என்னமோபோலிருந்தது. பூனைபோல் கர்ததாஸ் தெருவைப் பார்த்தான். 'இன்னிக்கு என்ன, ஒரு ஆஸாமிகூட வரவில்லையே?' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அடிவயிற்றில் ஏதோ வலிபோலிருந்தது அவனுக்கு. ஆனால், கர்ததாஸுக்கு ஏன் வருத்தம்? அவன் தொப்பைக்கு ஏன் வலி வருகிறது? ஒரு நாளுமில்லையல்லவா?

கிழக்கே சூர்யயோதயம் ஆகாவிட்டால் என்ன? கர்ததாவின் முக கமலம் திடீரென மலர்ந்தது. சந்தின் கோடியில் பரபரப்புடன் வந்துகொண்டிருக்கும் ஒரு ஸ்திரீயின் உருவம் அவன் கழுகுக் கண்ணிற்குத் தென்பட்டது. தன் புடவையில் கையை ஏன் மறைத்துக்கொண்டு அவள் வருகிறாள் என்பது அவனுக்குத் தெரியும்.

கர்ததாவின் முன்வந்து நின்றாள் அந்த ஸ்திரீ. அலட்சியமாய் அரைப் பார்வையுடன் கையை நீட்டினான் சாவுகார். "வேறு வழிஇல்லை; கடைசியாயிருக்கும் இதுவும் போகட்டும்" என்று தீர்மானித்தவளாய் அவள் சாவுகாரின் கையில் தான் கொண்டுவந்திருக்கும் சாமானைக் கொடுத்தாள்.

"ரண்டு ரூபா" என்று ஒரே தீர்மானமாய்ச் சாவுகார் சொல்லிவிட்டு, சிறிது நேரம் அவள் கொடுத்த நகையை இப்படியும் அப்படியும் பார்த்தான்; "சே, கண்ணாடிக்கல்லுன கட்டிருக்குது. நல்லா வச்சிருக்கே நீ தோடு! உன் புருசன் வாங்கிக் கொடுத்தானே கிச்மிச் பண்டிகேலே" என்று அழகாய்ப் பேச ஆரம்பித்தான்.

கொஞ்சம் அதிக ரூபாயைக் கேட்க வேண்டுமென்று அவளுடைய மனம் எழும்பிற்று; ஆனாலும் அவள் நா எழும்பவில்லை. சிறிய துக்கமாயிருந்தால் அவளுடைய கண்ணீர் அப்படி நெஞ்சை அடைத்திருக்காது. குடிசையில் ஊனமாய்ப்போய் உழைக்கமுடியாமல் கிடக்கிறான் அவள் புருஷன். அவன் 'ரோட் ரிபேர்' மேஸ்திரியாக இருந்தவன், ஒரு நாள் வெகு ஜரூராய் வேலை வாங்கிக் கொண்டிருக்கும் பொழுது கொதிக்கும் தார் அவன் உடம்பின் மீது கொட்டிடவே அவன் அங்கஹீனனாய் விட்டான். சென்னைக் கார்ப்பொரேஷன் கருணையினால் கொஞ்சம் பணம் இனாம் கிடைத்தது. அதுவும் என்ன மார்வாடி பணமா குட்டிப் போட? கார்ப்பொரேஷனில் தான் அப்படி என்ன அள்ளி விட்டு விட்டார்கள்? அவன் உழைக்கமாட்டாமல் குடிசையில் கிடக்க அவன் மனைவி பக்கத்திலுள்ள வீடுகளில் ஊழியம் செய்துவந்தாள்.

"ஆறு குழந்தைகள் இறந்து போயிடுச்சு; இது ஒண்ணுதான் இருக்குது; அய்யோ, இது மிகவும் கஷ்டப் படுதே; காச்சலின்னிக்கு மூணு நாளாயும் விடவில்லையே; நீ ரண்டு ரூபாயை நாலு ரூபாயாய்க் கொடுக்கக் கூடாதா? வேலைக்குப் போகவுமில்லை; வைத்தியனிடமும் போகவேணுமே" என்று சாவுகாரை நோக்கி அந்த ஸ்திரீ அழ ஆரம்பித்தாள்.

இவளுடைய சோக அலைகள் பாறை போன்ற கர்ததாவின்மேல் மோதிப் பயனென்ன? உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, தலையைக் குறுக்கே அசக்கி, "ரண்டு ரூபாய்" என்று சொல்லி விட்டு மறுபடியும் தயங்கிநின்ற அவளைப் பார்த்து "இந்தா" என்று வெள்ளைத் தோடுகளை விட்டெறிந்தான் சாவுகார். கை வைத்து வைத்து இத்துப் போயிருக்கும் கணக்குப் புஸ்தகத்தைப் புரட்டுவதற்கு ஆரம்பித்துவிட்டான். என்ன செய்வாளவள், பாவம்! கிடைத்த இரண்டு ரூபாயை எடுத்துக் கொண்டு ஒரே மூச்சில் தன் வீட்டையடைந்தாள்.

சந்தோஷத்தில் கர்ததாவின் கடைவாய்கள் காதளவு அகன்றன. நகையைத் தடவிக்கொடுத்துப் பெட்டியில் போட்டுக் கொண்டான். அடுத்த 'எலம்' அவன் கண்முன் வந்து நின்றது.

அந்தச் சந்திற்கு அடுத்த சந்து அதுபோலவே பிரபலமானது. அங்கே யுனானி ஹகீம் ஒருவன் வியாதியையும் ஜனங்களையும் சேர்த்து ஒழித்துக் கொண்டிருந்தான். அன்று மாலை ஹக்கீம் வீட்டின் முன்புறத்தில் குழந்தையொன்று உயிர்துறக்க, அதன் தாய் அலறிக்கொண்டிருந்தாள். ஹக்கீமோ தமது தாடியைத் தடவிக்கொடுத்து மருந்து விற்றுவந்த பணத்திற்குப் "புளாவு" வாங்கிப் போட்டுக்கொண்டிருந்தார்.



அபலைக் குருவிகள்

[ஜனங்களின் க்ஷேமத்துக்கும் வளர்ச்சிக்கும் சாதனமாய்ப் பிறந்த ஒரு கட்டுப்பாடுதான் ராஜாங்கம். நாணயமுள்ள அரசியல் வாதி அதன் பரம சத்ரு வல்ல. அவன் எண்ணம் நல்லது ; சீர் திருத்தம் நோக்கம். என்றாலும், பதவியில் உள்ள அதிகாரிகள் அரசியல் கைதிகளைத் தங்களுடைய மகா விரோதிகளைப்போல் நடத்துவது சகஜமா யிருக்கிறது. சிறையி லடைத்தாலும் மனிதன் ஜடமாக மாறிவிடான். அவனை மனித தர்மத்துக் கிசையவே நடத்தவேண்டும். எர்னஸ்ட் டாலர் என்பவர் ஒரு மாஜி ஜர்மன் அரசியல் கைதி. அவருடைய சிறை வாழ்க்கையின் ஒரு அத்தியாயத்தில், அடக்கு முறை வெறியில் மூழ்கிக்கிடந்த உத்யோகஸ்தர்கள், கேவலம் ஒரு ஜோடி தூக்கணங் குருவிகளுடன் நடத்திய அமர்க்களம் காணப்படுகிறது. டைம் அண்டு டைடு என்ற அரிய பத்திரிகையிலுள்ள அதனைக் கீழே மொழி பெயர்த்துத் தந்திருக்கிறோம்.]

வசந்தகாலம் ; ஒரு ஜோடி தூக்கணங் குருவிகள் சிறையிலே என தறைக்குள் புகுந்து கூடு கட்டின. கோடைகாலம் முழுதும் என்னோடு வசித்தன. பெண் குருவி முட்டைகள் இடும் ; ஆண் குருவி கீச்சுக் கீச் சென்று இசை பொழிந்து, பெடையின் ஆயாசம் தீர்க்கும். குஞ்சுகளும் தோன்றின. தாயும் தந்தையும் குஞ்சுகளுக்கு உணவூட்டிப் பறக்கக் கற்றுக் கொடுத்தன. ஒரு நாள் இறக்கைகள் முளைத்துக் குஞ்சுகள் பறந்தோடி விட்டன ; திரும்பி வரவேயில்லை. மறுபடியும் முட்டைகளும் அடைகாப்பும். இம்முறை பனியின் கொடுமையால் குஞ்சுகள் மரித்தன. ஆண், பெண் இரண்டு குருவிகளும் ஒன்றுடன் ஒன்று மௌனமாய் நெருங்கி முடங்கிக் கிடந்தது, பறிகொடுத்த குஞ்சுகளுக்காகத் துக்கம் கொண்டாடுவதுபோலிருந்தது. சரற்காலம் நெருங்கவே, குருவிகள் வேற்றிடம் தேடிச் சென்றன.

கோடையிலே, கூச்சமிருந்த இவ்விரு குருவிகளும் எப்படியோ என்னிடம் பழகிவிட்டன. மேஜையில் நான் எழுதிக் கொண்டிருப்பேன் ; இவை என் விளக்கின்மீது அமர்ந்து, களிப்புடன் கூவிப் பாடும். நான் மகிழ்ச்சி பொங்கி, சந்தடி செய்யாது, அமைதியா யிருப்பேன்.

நான் பார்த்ததையும் கேட்டதையும் உணர்ந்ததையும் நினைத்ததையும் சிறிய புத்தகமாய் எழுதி "குருவியின் புத்தகம்" என்று பெயர் சூட்டினேன். அதிலே எவ்விதக் களங்க எண்ணமும் கிடையாது. எனினும், கவர்னர் அச்சிறு புத்தகத்தைப் பறிமுதல் செய்துவிட்டார். ஜர்மன் பார்லிமெண்டு சபைக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன் :—

"நான் விசேஷச் சலுகை ஒன்றும் ஒரு பொழுதும் கேட்டதில்லை. இப்பொழுதும் சரிதான், எனது சாமான்ய உரிமையை ஊர்ஜிதம் செய்ய வேண்டுமென்றே கேட்கிறேன். மிருகத்தனமான ஜார் ஆட்சியில்கூடச் சிறைப்பட்ட ஆசிரியர்களுக்குச் சிந்தனைச் சுதந்திரம் உண்டு. 1923-ம் வருஷத்தில், பவேரிய ராஜ்யத்தில், உள்ளத்தின் உணர்ச்சியைக்கூடக் குற்றமாய்த் தண்டிக்கிறார்களே !

"சில மாதங்களுக்கு முன் எனக்கு உறவின் முறையான ஒரு டாக்டர் வந்தார். என் உடம்பு ஸ்திதியைப் பற்றி அவரிடம் பேசப் போன பொழுது, சிறை யதிகாரிகள் தடுத்துவிட்டார்கள். அப்பொழுது நான் வாய் திறக்கவில்லை.

"சிறைக்குள்ளே கிடக்கிறேன். பழிகளுக்குப் பதில் சொல்ல முடியாது அடைத்துக் கிடக்கிறேன். சட்ட சபையிலும் பத்திரிகைகளிலும் அதிகாரிகள் கண்ட கண்ட அவதூறையெல்லாம் என்னைப் பற்றித் தூற்றினார்கள். இதைப்பற்றித்தான் நான் புகார் சொன்னேனோ?

"என்னதான் திட்டுகிறார்கள் என்பதைப் பற்றியாவது தெரிந்துகொள்ள ஆசைதான். ஆனால், சிறையதிகாரிகள் பத்திரிகைகள் ஒன்றுமே எனக்குக் கிடைக்காதபடி பறிமுதல் செய்துவந்தார்கள். அதைப்பற்றி முறையிடவும் நான் இச்சிக்க வில்லை.

"கைதிகளெல்லாம் வெளியிலுள்ள அதிகாரிகள் பலருக்கு மகஜர் மகஜராய் எழுதி வந்தார்கள். அவை எதிலும் நான் கையெழுத்துப் போட்டதுகூடக் கிடையாது.

"ஆனால், இன்று நான் ஜெர்மன் பார்லிமெண்டுக்கு விஞ்ஞாபனம் செய்துகொள்ள முன்வந்திருக்கிறேன்.

"உணர்ச்சி தூண்டுகிறது ; நூல்களை எழுதுகிறான் ஓர் ஆசிரியன். இத்தகைய ஜர்மன் இலக்கியத்தைச் சிறையதிகாரிகள் அமுக்கிப் புதைக்க முயலுவதை நீங்கள் சகித்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா? சிறையிலுள்ள ஓர் கைதியும் ஜர்மன் குடியரசைச் சேர்ந்தவன்தான். அவன் பொது உடைமை வாதி என்ற ஒரே காரணத்துக்காக மனிதவர்க்கத்தின் விரோதிபோல் நடத்தப்படுவதைச் சகித்துக்கொண்டிருக்கப் போகிறீர்களா?"

இந்தக் கடிதத்திற்கு ஜர்மன் பார்லிமெண்டு ஒரு பதில்கூட எழுதவில்லை. ஆகையால், எனக்கு யுக்தமாய்த் தோன்றிய வழியில் நான் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. 'தூக்கணங் குருவி நூலை' விடுதலை பெறப்போகும் கைதியொருவர் சிறியதொரு துண்டுக் காகிதத்தில் எழுதி, அதிகாரிகளறியாமல், இரகசியமாய் வெளியே கொண்டுபோய்ச் சேர்த்தார். அது கடைசியில் பிரசுரமும் ஆகிவிட்டது.

கவர்னர் வெகுண்டு, அபூர்வமுறையில் பழிதீர்த்துக் கொண்டார். அவருடைய அபார சாமர்த்தியம் வேறு யாருக்கும் வராது! கிழக்கு நோக்கிய ஜன்னலுக்கு எதிரே மறைவான இடத்தில் பட்சிகள் ஒரு பொழுதும் கூடு கட்டுவதில்லை. ஆகையால், வடக்கு நோக்கிய வேறோர் அறைக்கு என்னை மாற்றிவிட்டார்.

மனிதர் கண்படா எந்தக் கானகமோ, கொளுத்தும் வெயிலெரிக்கும் எந்த வனாந்திரமோ, எங்குபோயிருந்தனவோ அந்தக் குருவிகள். வசந்தகாலம் வந்ததும், அவையும் வந்து சேர்ந்தன.

நூற்றுக் கணக்கான சிறைகளுக்கு நடுவே எங்கள் சிறையையும், அதிலும் பல நூறு அறைகளுக்கிடையே எனது பழய அறையையும், அவை எவ்வாறோ கண்டு பிடித்துவிட்டன. கூட்டையும் கட்டலாயின. கவர்னர் உத்திரவு போட்டார்; காவலாளிகள் அட்டகாசமாய் அறையுட் புகுந்தார்கள். வன்னெஞ்சுடன், ஈர இரக்கமின்றி, அந்த எளிய குருவிகளின் கூட்டைப் பறித்துச் சின்ன பின்னம் செய்து விட்டார்கள்.

என்னென்ன வெல்லாமோ எண்ணினேன். குருவிகள் தங்கள் சின்னஞ் சிறு இல்லத்தை இழந்து எவ்வாறு கலங்கினவோ! ஆசையோடு தங்கள் அலகுகொண்டு சுவரின் மூலை முடுக்கிலெல்லாம் தடவித்தடவி எப்படித் தேடினவோ! கவலையுடன் சுற்றிச்சுற்றி எவ்விதம் வட்டமிட்டுப் பறந்தனவோ! ஆயினும், மறுதினம் அவை மறுபடியும் கூட்டைக் கட்டத் துவங்கின; காவலாளிகளும் திரும்பவும் அதை யழித்தனர்.

எனது பழைய அறையில் குடி புகுந்த புதிய கைதி, ஒரு சிற்பி. அவர் கவர்னருக்கு எழுதிய ஒரு விண்ணப்பமாவது :—

“கனம் மிகுந்த ஐயா—எனது அறையிலுள்ள குருவிகளை அமைதியாய்த் தங்கியிருக்க விடுங்கள். அவைகள் பொறுமையுடன் உழைத்தன; வேண்டிய இன்னல்களை அனுபவித்துவிட்டன. இன்னும் அவை உழைப்பைக் கைவிடவில்லை. இந்தச் சிறு குருவிகள் எனக்கு எவ்விதத் தொல்லையும் தரவில்லை; அறையை அசுத்தம் செய்யவுமில்லை. வேறு எத்தனையோ சிறைகளைப் பார்த்திருக்கிறேன். அவற்றில் இவை போன்ற குருவிகள் கூடு கட்டி வாழ்வதையும் கண்டிருக்கிறேன். அங்கெல்லாம், இக்குருவிகளுக்குத் தீங்கிழைப்போருக்குத்தான் அதிகாரிகள் தண்டனை விதித்தார்கள்.’’

இதற்குக் கவர்னர் எழுதிய பதில் என்ன வென்று நினைக்கிறீர்கள்? குதிரை லாயத்தில்தான் குருவிகள் கூண்டு கட்டவேண்டுமாம்! அங்கே அவைகளுக்கு வேண்டிய ஏராளமான இடம் இருக்கிறதாம்! இவைதான் கவர்னரின் பதில்.

குருவிகளோ மறுபடியும் கூண்டைக் கட்டின; அவ்வாறே காவலாளிகளும் அதை நாசம் செய்தனர். என்னைப்போலவே, அந்தக் கைதியும் வேறு வடக்குமுக அறைக்கு மாற்றப்பட்டார். குருவிகள் கூண்டு கட்டிய அறையைப் பூட்டியும்விட்டார்கள்.

குருவிகளுக்கு ஒன்றும் புரியவில்லைபோலிருக்கிறது. ஆசை மிகுதியால் ஏககாலத்தில் மூன்று கூண்டுகளை வெவ்வேறு அறையில் கட்டலாயின. ஆனால், கூடுகள் அரையும் குறையுமாயிருக்கையிலேயே, காவலாளிகள் அவற்றைப் பிய்த்தெறிந்தனர்.

சோகத்திலே உண்டாகும் சக்தி பெரிதல்லவா? குருவிகள் ஒரே சமயத்தில் ஆறு கூண்டுகளுக்கு அடிப் போட்டன. தயாள குணத்தால் ஒரு கூண்டையாவது தக்க விடார்களா என்று ஒரு வேளை அந்த ஏழைக் குருவிகள் எண்ணினவோ, என்னவோ!

எனினும், ஆறு கூண்டுகளையும் காவலாளிகள் பிய்த்துக் குலைத்தனர்.

அவை எத்தனை தடவைதான் கட்டினவோ? காவலாளிகள் எத்தனை தடவை நாசம் செய்தனரோ? எனக்கு ஞாபகமில்லை. இந்தப் போராட்டம் ஏழு வாரம் நடந்தது என்று மட்டில் நினைவிருக்கிறது. பவேரியச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட முயன்ற சர்க்காருக்கும் இரண்டு சின்னஞ் சிறு அபலைக் குருவிகளுக்கும் நடந்த வீரப் போராட்டமல்லவா இது? கடைசித் தடவைக்குப் பிறகு, சில நாட்கள் வரை கூண்டுகளைக் காணோம். குருவிகள் முயற்சியைக் கைவிட்டு விட்டனபோல் தோன்றியது.

ஆனால், வெகு சீக்கிரத்தில் கைதிகள் காதோடு காது பேசிக் கொள்ளலாயினர். கொல்லைப் புறத்திலே தண்ணீர்க் குழாய்களுக்கு அருகே மனிதர் கண்ணுக்கு அகப்படாத புதியதொரு இடத்தைக் குருவிகள் கண்டு பிடித்துவிட்டன என்பதுதான் அந்த அந்தரங்கப் பேச்சு. நாங்கள் அப்பொழுதடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. மனிதனுடைய மிருகத்தனத்துக்கு எதிரே நடத்திய போராட்டத்தில் இறுதியில் அந்தக் குருவிகளே ஜயித்துவிட்டன. அந்த ஜயம் எங்களுக்கும் சொந்தமான ஜயமே யன்றோ!

ஆனால், இந்தக் கூண்டும்கூடக் காவலாளிகள் கண்ணுக்குத் தென்பட்டுவிட்டது; நாசமுமாயிற்று.

அதற்குப்பின், அந்தக் குருவிகள் கூடெதுவும் கட்டவேயில்லை. அவ்வெளிய குருவிகளிரண்டும் மாலையிலே அறைக்குள் புகுந்து ஓர் மூலையிலே ஒன்றையொன்று தழுவி முடங்கிக் கிடக்கும். பொழுது புலர்ந்ததும் பறந்தோடிச் செல்லும். இவ்வாறு காலம் கழித்தன. ஒரு நாள் அந்தியில் ஆண் குருவிமட்டில் தனியே திரும்பிவந்தது; பெண் குருவி இவ்வுலக வாழ்வையே நீத்துச் சென்றுவிட்டது.

TEETH TREATED / SUPPLIED

7 A.M. TO 12 NOON.

2. P.M. TO 6. P.M.

Dr. S. J. MORO.
DENTAL SURGEON.
3/256. CHINA BAZAAR, ROAD.
(OPP. TO FLOWER — BAZAAR POLICE STATION) MADRAS.

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனாசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.



செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர்

ஈ. கிருஷ்ணய்யர் எழுதியது

ஸங்கீத வித்வான்களில் வயதிலும் அனுபவத்திலும், முதிர்ந்த பெரியார்கள் ஒருபுறமிருக்க, அவர்களுக்குப் பின் வாழையடி வாழையாய் வளர்ந்து வரும் இளம் பாடகர்களிற் சிலர் தற்காலம் பிராபல்யமடைந்து வருகின்றனர். அவ்வாறான 'ஜூனியர்' கச்சேரி வித்வான்களில் ஒருவர் செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர். பேச்சிலும் நடையுடை பாவனைகளிலும், துடிதுடிப்பாயிருக்கும் வாலிபர்களிடம் நம்மை யறியாத வாத்ஸல்யமும் ஸந்தோஷமும் வருவது ஸகஜம். ஒருவாறு அத்தகைய உணர்ச்சி ஸ்ரீநிவாஸய்யர் சங்கீதத்தைக் கேட்கும்போது தோன்றும்.

விரைவாக முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் இளம் பாடகர்களில் இவரே வயதில் அதிகம் குறைந்தவர் என்னலாம். சுமார் 26 தான் ஆகிறது; வயதுக்குத் தகுந்த உத்ஸாக குணம்; ஸரஸமான வார்த்தை; எளிதில் ஸ்நேகம் செய்து கொள்ளும் மனப்பான்மை; குட்டையான சரீரம்; முகவாய்க்கட்டை சிறிது முன்னிற்கும் முகம். சாதாரணமாய் உச்சிக் குடுமி; சில தடவை மாறுபட்டுமிருக்கும். தேசிய உணர்ச்சி கொண்டவர். கதராடை பெரும்பாலும் அணிவதாகத் தெரிகிறது. சில தடவை தமது கதர்ப்பையைத் தோளிலிருந்து தொங்கவிட்டுக்கொண்டு உலாவும்போது தேசியத் தொண்டர் போலவே தோன்றுவார்.

செம்மங்குடி ராதாகிருஷ்ணய்யரின் மூன்றாவது குமாரன். திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யருக்கு மருமான். பிடில் செம்மங்குடி நாராயணஸ்வாமி அய்யருக்கு 'ஒன்றுவிட்ட' தம்பி. மேற்படி நாராயணஸ்வாமி அய்யரிடமே ஸங்கீதம் ஆரம்பித்து, சுமார் நாலு வருஷம், காலஞ்சென்ற சகாராம ராவிடம் ஸங்கீதம் பயின்றார். மறுபடியும் தமது தமையனார் நாராயணஸ்வாமி அய்யரிடமே சென்று மேலும் கற்றுக்கொண்டார். பிறகு மஹாராஜபுரம் விசுவநாதய்யரிடம் சுமார் 3 வருஷம் சீடராயிருந்து கீர்த்தனங்கள், ஸ்வர ப்ரஸ்தாரங்கள் இவைகளில் நல்ல பயிற்சி யடைந்தார். நடுவில் உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யரிடமும், நெருங்கிப் பழகி லட்சண ஞானம், மேளகர்த்தா ராக சக்ரம், முதலியவைகளையும் அறிந்தார். விரைவாக முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறார். இளைஞர்களுக்கு அவருடைய ஸங்கீதத்தில் அதிக மோஹம். அவரிடம் அதிக நட்புக் கொண்டு, அவரையே, சுற்றிக் கொண்டு, அவர் புகழிலேயே ஆநந்தமடையும் யுவர்களும் சிலருண்டு.

ஜீவனுள்ள சாரீரத்தைப் படைத்திருக்கிறார். அதிகக் கணிப்பும் கொண்டதில்லை. ஸன்னமாயுமில்லை. நினைத்த படி பேசும் உதவுபடி கொண்டது. 'பிர்க்கா' வகையைச் சேர்ந்தது. ஆனால் சில சமயங்களில் மூக்கு ஸம்பந்தப்பட்ட நாதம்போல் கேட்கும். அது அதிக அவசியமாகத் தோன்றவில்லை. நாளாக நாளாக மறைந்தாலும் மறையலாம். உதவுபடியோடு, இயற்கை இனிப்பு அதிகமுடையதா என்பதைப் பற்றி அபிப்பிராயபேதம் கொள்ளலாம். இத்தகைய சாரீரத்துடன் அனுபவித்தும் பாடுகிறார். அநேக தடவை தன்னை மறந்தே பாடுகிறார் என்னலாம். அவ்வம்சம் ஸாதாரணமாய் வித்வான்களிடமிருப்பது அரிது. மனோதர்மம் பெருமிதமாயிருப்பதால் ஸங்கதிகள் அருவி போல் விழுகின்றன. ராகம் பாடும் போதும், நெரவல்கள் செய்யும்போதும் இது நன்கு தென்படும். சாரீரத்துடன் இளம்வயதுடையோருக்கு 'பிர்க்கா'க்களைக் கொட்டுவதில் மிகப் பிரியம். அதை தடுப்பதும் கஷ்டம். ஸ்ரீநிவாஸய்யரிடமும் இவ்விஷயம் அதிகம். குழைவுகளும் கமகங்களும் கலந்தேயிருக்கின்றன. சில இடங்களில் பிடில் வாத்தியக்காரரிடம் பிரத்யேக அழகுடன் விளங்கும் சில ஸாதகங்களும், பிடிகளும் இவரிடம் காணப்படும்; வக்ரங்களும் உண்டு. ஆங்காங்கே விழும் சில பிடிகள், கோனேரி ராஜபுரம் வைத்யநாதய்யரைச் சிறிது நினைவூட்டுவதாகத் தோன்றும். ஸ்வரச்சேர்க்கைகளில் கற்பனையாகவும், ரஞ்சகமாகவும் பாடுவது போற்றத்தக்கதே. சில சமயம் அழகாக அமைந்துள்ள வர்ணங்களில் காணும் ஸ்வர வரிசைகளையும் ஸஞ்சாரங்களையும் பின்பற்றி யிருப்பதுபோல் காணும். தாளக்கட்டிலும் குறைவில்லை.

ஆனால் மொத்தத்தில் அவர் ஸங்கீதம் இப்போது அவஸரங் கொண்டதென்றே சொல்லவேண்டும். குழைவுகள், கமகங்கள், பிர்க்காக்கள் முதலியன போதுமான அளவுகொண்டு, தங்கள் தங்கள் இருப்பிடம் பொருந்தி, நிதானத்துடனும், ஸாவதானமாயும், தன்னிச்சியம் கொண்ட அழுத்தத்துடனும் பாடுகின்ற பாணி இன்னும் அதிகமாக அவரிடம் வளர வேண்டும். பாய்ந்தோடும் குதிரையை, லகான் பிடித்தடக்கி ஒழுங்காய் ஓட்டுவிக்கும்

திறம்போல், தன்னுள் பொங்கியெழும் மனோ தர்மத்தை, வழுவாத விதரணையாய் வெளிக்காட்டும் போதுதான் அத்தகைய பாணியும் சுகமும் ஏற்படும். நுட்பமான பிடிப்புகளோடு, ஜீவஸ்வரங்கள் உள்பட வேண்டிய இடங்களில் நிதானமாய், போதுமான, கார்வைகள் கொடுத்தும், பெரிய குழைவுகளை அழுத்தமாய்க் காட்டியும் இவ்வாறான இடங்களில் சுத்த நாதத்தினாலேயே சுகம் கொடுக்கும் தன்மை இன்னும் அதிகம் வளர்ந்தால் மேன்மையாயிருக்கும். ஸ்ரீநிவாஸய்யரிடம் உயரிய ஸங்கீதத்துக்கான அம்சங்களும், ஒருவாரான 'பாணி'யுமிருப்பினும், இளம் வயதினாலும், சாரீரததிலுள்ள துடிதுடிப்பினாலும், சாரீர மனோதர்மங்களை அடக்கியாண்டு, செவ்வனே ஒழுங்குபடுத்தி, நிதானத்துடன் தன் கலையைப் பிரகாசிக்கும் தன்மை முற்றிலும் வளர்ந்திருப்பதாகச் சொல்வதற்கில்லை. பாடகர்களுக்கு வயதும் அனுபவமும் வளர வளர, தங்கள் முன் பருவங்களிலான ஸங்கீதத்தின் உண்மை நிலையைத் தாமே அறிவார்கள்.

இவர் கச்சேரிகளெல்லாம் கச்சிதமாய் அமைவதற்கான பாணியையும் இன்னும் சற்றுக் கவனித்தல் நலம். மட்டுக்கடங்காத மனோ தாமத்துடன் தன்னை மறந்து பாடுவோருடைய குண தோஷங்கள் இப்போது இவரிடம் காணப்படுகின்றன. ஆனால் அத்தகைய ஸங்கீதம் எளிதில மனதைக் கவர்ந்துவிடும், சிறிது நேரத்திலேயே கேட்போரை ஆரவாரிக்கச் செய்யும். சில விடங்களில அஸாத்யமாகவே தோன்றும். ஆனால் தொட்டவிடமெல்லாம் சுததமா யிருககுமா என்று கவனிக்க மாத்திரம் அவ்வளவு இயலாது.

இத்தகைய குணங்கள் உள்ளோரிடம்தான் அங்க சேஷ்டைகளும் முக விகாரங்களும் அதிகம் காணப்படும். அவைகளை அடக்கவும் முடியாது. இவ்விஷயத்தில் இவருக்கு 'அண்ணா' ஒருவர் இருக்கிறார் என்பது தென்கோடி ஜில்லாக்களில் பழகியவருக்குத் தெரியவரும். பொங்கிவரும் மனோ தாமத்துடனும், அசுர ஸாதகத்துடனும், தன்னை மறந்து பாடுவதும், அதற்கேற்ப அதிக அங்க சேஷ்டைகள காட்டுவதுமான விஷயத்தில் இவரைக் கேட்கும் தெற்கத்தியர்களுக்கு, வேதாந்த பாகவதர் தம்பியான, கல்லிடைக் குறிச்சி ராமலிங்க பாகவதரின் நினைவு வராமலிருக்காது. அங்க விகாரங்களை அடக்கினால் மனோ தர்மமும் குறைந்துவிடுமோ என்று ஸந்தேகப்படுவதாயிருப்பதால் அவைகளை அபிமானிகள் அதிகம் பொருட்படுத்த மாட்டார்கள். எனினும் கூடியவரை அவைகளைக் குறைப்பதே மேல் என்று சொல்லாதிருக்க முடியவில்லை.

தானே அனுபவித்துப் பாடுவோரிடம் ஸங்கீதத்தில் ஏற்கனவே 'பாவம்' காணப்படுவது ஸகஜமே. [ஸாதாரணமாய்ப் பாடகருக்கும், ஜனங்களுக்கும் அர்த்தமாகக் கூடிய பாஷையில் அமைந்த பாட்டுகளைப் பாடும்போது பாவம் வெளியாவது இயற்கை. கேட்டவுடன் உணர்ச்சியை எழுப்பும் தன்மையையும் தமிழ் நாட்டில் யாவருக்கும் எளிதில் அர்த்தமாகக் கூடிய பாஷை நடையையும் கொண்ட பாரதியார் பாட்டுக்களைப் பாமரரும் 'பாவ'த்துடன் பாடாதிருக்க முடியாது. வித்வானாகிய ஸ்ரீநிவாஸய்யர் ஒன்றிரண்டு பாரதியாரின் பாடல்களைப் பாடும்போது 'பாவம்' குறையாது நன்கு பொருந்தியிருப்பது போற்றத்தக்கது. ஆனால் ஒரு ஸங்கீதக் கச்சேரியில், அப்பாட்டுகளுடன் தற்காலத்தில் ஸாதாரணமாய்த் துக்கடாவாகக் கருதப்படாத கீர்த்தனை, ராகம் முதலியன பாடும்போதும் மொத்தத்தில் 'பாவ'த்துடனிருக்கின்றனவா என்றும் சற்றுக் கவனித்தல் வேண்டும்.] தன்னை மறந்து பாடுவோரிடம் 'பாவ'மும் அதிகமாய்க் காணலாம்; அல்லது, நுட்பமான ஸங்கதிகளை மேலுக்கு மேல் வளர்ப்பதிலேயே தன் மனதை இழந்து விடுவதையும் காணலாம். எல்லாச் சங்கதிகளும் பொருத்தமான 'பாவ'ங்களைக் காட்டாது. ஸ்ரீநிவாஸய்யர் ஸங்கீதத்திலும் 'பாவம்' காணப்படுவது வாஸ்தவமே; போற்றத்தக்கதே. ஆனால் ஸினிமாக் காட்சியில் அதிக வேகத்தினாலும், அதிக அலைவுகளினாலும், காட்சித் துணுக்குகளாலுண்டாகும் உணர்ச்சியை நீடித்து அனுபவிக்கமுடியாது. அதுபோல் துடிதுடிப்பாய், மேலுக்கு மேலுக்குமேல் இடைவிடாது பொழிந்து கொண்டிருக்கும் பெருமிதச் சங்கதிகளாலும், ஸஞ்சாரங்களாலும், உண்டான வேகத்தில் ஓர் தடவை வெளிக்காட்டும் 'பாவ'த்தின் உணர்ச்சியையும் சுகத்தையும் நிதானித்து அனுபவிக்க இடமோ சாவகாசமோ அதிகம் இருப்பது அரிது. பொட்டையாய்ப் பாடுவோரை விடக் கற்பனையுடன் பாடுவோர் மேலோர். கற்பனைகளில் இடத்துக்குப் பொருத்தமானதும், அதிக அழகானதையுமே பொறுக்கி வைத்துக்கொண்டு, மற்றவைகளை அடக்கி நிதானமாய் உபயோகிக்கும் விதரணை அறிவு இன்னும் மேலானது. இத்துடன் 'ஸ்வானுபூதி' சேரும்போது, வெளியாகும் 'பாவ'த்தின் உணர்ச்சி, நிதானத்துடன் நீடித்த பயன் கொடுக்கும். ஆனால் இவையெல்லாம் பெரும்பாலும் இயற்கையிலேயோ, அல்லது அனுபவத்தினாலோ அமையவேண்டும். இவ்விஷயம் சிறிது நுட்பமாகத் தோன்றினாலும் வீணை தனத்தினுடைய மகள் ஜயம்மாள் ஸங்கீதத்தைக் கவனித்துக் கேட்டால் எளிதில் விளங்கும்.

மொத்தத்தில் ஸ்ரீநிவாஸய்யரின் ஸங்கீதம் நன்கு அனுபவிக்கக் கூடியதே. நாளடைவில் உன்னத ஸ்திதிக்குக் கொண்டு வருவதற்கான அம்சங்கள் அவரிடம் நிறைந்தே யிருக்கின்றன.

விலை அணா இரண்டே! முந்துங்கள்!!

ஸ்ரீமான் S. G. கிட்டப்பாவின் சரித்திரம்

காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திரம் வெளிவந்துவிட்டது. 53 பக்கங்களும் 5 அழகிய படங்களையும் உடையது. ஸ்ரீ கிட்டப்பாவினிடம் நெருங்கிப் பழகிய தேசபக்தர் ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியரால் எழுதப் பெற்றது.

சங்கு ஏஜெண்டுகளுக்கு வியாபாரத்திற்காக ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும், மாதிரிக் காப்பிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ஆக்கூர், அனந்தாச்சாரி,
ஆரிமுத்து ஆசாரி மேஸ்திரி தெருவு,
திருவல்லிக்கேணி, சென்னை.

Have your Majestic figures at

R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.

"The Best" and most up-to-date staff and finish.

Artists & Bromide Enlargers & Oil Painters.

55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

குரு கோவிந்த சிங்கன்

(வ. வே. ஸு. அய்யர் எழுதியது)

[பூர்வ கதை:—தேக பகதூரை டில்லி பாதுஷா சிரச்சேதம் செய்து விடுகிறான். இவனைப் பழி வாங்க, தேக பகதூரின் குமாரன் குரு கோவிந்தன் சிஷ்யர் படை ஒன்று, பல ஜாதி வகுப்புகளிடமிருந்தும் திரட்டுகிறான். தலை மயிரை வளர்த்து, கங்கம், கச்சம், இரும்பு வளை, கிருபான் முதலிய சின்னங்களைச் சிஷ்யர் அணியச் செய்து, வேறு சம்ஸ்காரங்களும் செய்விக்கிறான். இருபது வருஷ காலம் காட்டில் வசித்து, கோட்டைகள் கட்டிக்கொண்டு, மொகலாய அரசர்களை அவ்வப்போது தாக்கி வந்தான். கடைசியாக, இருகட்சிக்கும் பெரிய தொரு யுத்தம் துவங்குகிறது]

போர்க் களம்

எதிரிகள் ராஜ புத்திரர்கள்; தலைமுறை தலைமுறையாய்ப் போருக்கென்றே வளர்ந்தவர்கள்; போருக்கென்றே ஜீவனை வைத்துக் கொண்டிருப்பவர்கள். சிஷ்யர்களோ சாதாரணமாகப் பயிரிடுபவர்கள். அவர்களிற் பெரும்பாலோர் ஆயுதத்தைத் தொட்டு வெகு நாட்களாகாதவர். சாமானியமாகப் பார்த்தால், குருவின் சைனியம் நாஹன் சைனியத்திற்கெதிரே நின்று வெகு நேரம் போர் புரிதல் சாத்தியமில்லை. நாஹன் அரசனும் அவன் துணைகளும் அவ்வாறேதான் நினைத்தார்கள். ஆனால் நபோலியன் சொல்லுகிறதுபோல, ஆள் பலம் கால்தான், ஆத்ம பலம் முக்கால் பங்காகும். ஆகையால் சுதந்திர தாகமும், தெய்வ பக்தியும், தங்கள் குருவும் தலைவனுமான கோவிந்தனுடைய சாமர்த்தியத்திலும் சக்தியிலும் நம்பிக்கையுமுள்ள சிஷ்யர்கள் அஞ்சா நெஞ்சத்தோடு எதிரிகளைத் தாக்கினார்கள். போர் வெகு உக்கிரமாக நடந்தது. சிஷ்யர்களுடைய ஆவேசமும் எதிரிகளுடைய பலமும் ஒன்றுக்கொன்று தோற்கவே தோற்கா என்று சொல்லும்படியிருந்தது. ஆனால் குரு கையிலே பரசுவை எடுத்துக்கொண்டு மேற்செல்லுமிடங்களிலெல்லாம் நாஹனுடைய போர் முனை சிதைக்கப்பட்டுப் போகும். அவனுடைய பயங்கரமான தோற்றத்தையும் இரண்டு பலிஷ்டர்கள் சேர்ந்தும் தூக்கமுடியாத அக் கோடரியைச் சுழற்றும் லாகவத்தையும் கண்டு சத்துருக்கள் ஒரு பக்கம் நடுநடுங்கிப் பின் வாங்கினார்கள். இன்னொரு பக்கம் வியந்துகொண்டு அப்படியே நின்றுவிட்டார்கள். ஆனால் நாளாகடம் என்ற நாட்டின் அரசனான ஹரிசந்திரன் என்பான், தன்னுடைய சௌரியத்தையும் பலத்தையும் காட்டிப் புகழ் சம்பாதிப்பதற்கு இதுவே சமயமென்று கொதித்தெழும் சிங்கத்தைப்போல மேல் வந்துகொண்டிருக்கும் குருவினுக்கெதிரே வந்து போர் கொடுக்கத் தலைப்பட்டான். ஹரிசந்திரன் 25 வயது வாலிபன்; ஆஜானுபாஹு. அவன் தோற்றம் மலையை ஒத்திருந்தது. குருவின் பராக்கிரமமாகிற வெள்ளம் இந்த அணையைக் கடந்து இனி மேற் செல்லாது என்று தோன்றியது. ஹரிசந்திரன், பீமசேனனுடைய கதை தானோ என்று ஐயத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்த தன்னுடைய கதாயுதத்தை எடுத்துக்கொண்டு, குருவின் வழியை மறைத்தான். இரண்டு பக்கத்திலுமுள்ள வீரர்கள், இவர்களின் யுத்தத்தைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையினால் தூண்டப்பட்டு, அப்படியே ஸ்தம்பாகாரமாய் நின்றுவிட்டார்கள். குருவும் பலவானான எதிரி கிடைத்ததுபற்றிச் சந்தோஷம் கொண்டு எதிரியைத் தாக்கினான். இரண்டுபேரும் சரிசமமாக வெகு நேரம் போர் செய்தார்கள். குருவினுடைய கோடரி ஹரிசந்திரனுடைய மார்பை இரண்டு துண்டாக வெட்டிவிடும்போல விழும். ஆனால் ஹரிசந்திரனுடைய கதாயுதம் வெகு கணக்காக வந்து கோடரியின் வாயைத் தேக்கி ஒதுக்கிவிடும். அடுத்த நிமிஷம் ஹரிசந்திரனுடைய கதை குருவினுடைய சிரசை நூறு சுக்கலாக உடைத்துவிடும்போல வஜ்ராயுத வேகத்தோடு இறங்கும். ஆனால் குருவின் கோடரிக் காம்பு அந்தக் கதையின் வேகமெல்லாம் பறந்தோடிப் போம்படி செய்துவிடும். இவ்வாறு வெகு நேரம் போர் நடந்தது. ஒவ்வொருவனும் இந்த விசை சத்துரு இறந்தான் என்று பலதடவைகள் நினைத்துப் பல தடவைகள் ஏமாந்து போய்விட்டான். ஆனால் மத்த கஜம்போன்ற சரீரத்தையுடைய ஹரிசந்திரன் காலக்கிரமத்தில் சளைக்கத் தலைப்பட்டான். குரு கோவிந்த சிங்கனோ, போர் ஆரம்பித்த காலத்தில் இருந்த தெளிவுடனும் சாவதானத்துடனுமே இருந்து தாக்கினான். ஆகவே ஹரிசந்திரனை அவன் அடி அடியாய்ப் பின்னடையச் செய்து கடைசியாக அவனைத் தன் பரசுவினால் வெட்டி வீழ்த்தியும் விட்டான். நாஹனுடைய சைனியம் இந்தத் தனிப்போரின் விளைவைக் கண்டு புறங்காட்டியோட ஆரம்பித்தது. ஆனால் அதே சமயத்தில் குருவினுடைய சைனியத்தில் உள்ள பட்டாணியர் சமயம் பார்த்துக் கலகஞ்செய்ய ஆரம்பித்தனர். எதிரியை நோக்கிச் செல்லவேண்டிய வேகம் தடைப்பட்டது. சிஷ்யரின் பலம் கலகம் செய்த பட்டாணியரை அடக்குவதில் செலவாக வேண்டியதாகிவிட்டது. பட்டாணியர் அடக்கப்பட்டார்கள். ஆனால் சத்துருக்கள் ஓடிவிட்டனர்.

சத்துருக்கள் ஓடிவிட்டாலும் முறிபடவில்லை. வீரியத்தில் சிஷ்யர் அவர்களுக்கு இணையாக இருந்தாலும் ஆள் தொகையில் நாஹன் கூட்டத்தாருக்கு மிகவும் தாழ்ந்தவர்களாயிருந்தார்கள். ஆகையால் குரு அவ்விடத்தை விட்டுச் சத்லேஜ் நதிக்கரையோரத்துக்குப் பின் வாங்கிக்கொண்டு வந்து ஆனந்தபூர் கோட்டையை அடைந்து அதை யுத்த சன்னத்தமாக்கும் காரியத்தில் இறங்கினான். அவன் நாகன் அரசனை வென்று ஹரிசந்திரனைத் தனிப்போரில் கொன்ற செய்தி அவனுக்கு முன்னாகவே அப்பிரதேசத்துக்கு எட்டி அவனுடைய கீர்த்தியைப் பரப்பியிருந்தது. ஆகவே கஹலூர் அரசனான பீமசந்திரன் என்பான் மொகலாயருக்கு விரோதமாகக் குருவின் துணையை நாடினான். பல மலை நாட்டரசர் மொகலாயருக்குத் துணையாகவும் கஹலூருக்கு விரோதமாகவும் துவஜம் கட்டினார்கள். ஆனால் சிஷ்யர்களின் வீரமும் பீம சிங்களின் சௌரியமும் ஏகாதிபத்திய சைனியத்தை முறியடித்து விட்டன.

இரண்டு முறை முகலாய சைனியத்தைக் கோவிந்தன் தோற்கடித்து விட்டான் என்று கண்டதும் ஏகாதிபத்திய அதிகாரிகள் குருவைத் தாக்கி அழித்துவிடுவதற்காக ஒரு பெரிய சைனியத்தைத் தயாரித்து அனுப்பினார்கள். குருவினுடைய தன்மையையும், அவன் ஏற்படுத்தி வைத்த புதிய பத்ததிகளையும் பற்றிக் கேள்வியுற்றதும், இவன் சிவாஜியை விடப் பெரிய சத்துருவாவன் என்று ஔரங்கஜேபின் கூர்மையான அறிவுக்குப் பட்டது. ஆகையால் அவன் சாமானியமான நாயகர் சென்றால் போதாது என்றும், லாகூர் ஸுபேதாரும் ஸர்ஹிந்து ஸுபேதாரும் பெரிய சைனியத்தோடு சென்று குருவை நசுக்கிவிட வேண்டும் என்றும், அவசியமானால் அவர்கள் காபூலுக்குச் சீட்டனுப்பித் தன் மகன் பஹதூர் ஷாவையே துணைக்கு அழைத்துக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவு செய்தான். இரண்டு ஸுபேதார்களும் கோவிந்த சிங்கனைப் பெரிய படைகளுடன் தாக்கினார்கள். அவனும் திறந்தவெளியில் பல இடங்களில் போர் செய்து பார்த்து, அவர்களுடைய பெருஞ்சைனியத்தோடு மேலே போர் நடத்த முடியாமல் வெளியிலுள்ள சிஷ்யர்களுக்கு ஸ்ரீ முகம் அனுப்பிச் சீக்கிரம் வந்து சத்துருக்களைத் தாக்குங்கள் என்று ஆஞ்ஞாபித்துவிட்டு, தன்னோடிருந்த சைனியத்துடன் ஆனந்தபூர் கோட்டைக்குள் பிரவேசித்துக் கொண்டான். சத்ருக்கள் ஆனந்தபூரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

சிஷ்யர் முதலில் வெகு உற்சாகத்துடனிருந்தார்கள். எதிரிகள் அஜாக்கிரதையாக இருக்கையில் வெளியேறி அவர்களைச் சாடிவிட்டு, அவர்கள் தெளிந்துகொண்டு ஒன்றுகூடித் தங்களைத் தாக்குமுன் கோட்டைக்குள் வந்து புகுந்து விடுவார்கள். எதிரிகள் கோட்டையைத் தாக்க யத்தனிக்கும்போது இவர்களில் ஓர் சாரார் கோட்டை மதில்மீதிருந்து பீரங்கிப் பிரயோகம் செய்வார்கள். இன்னொரு சாரார் பாணத்தால் அவர்களை அடித்துக்கொண்டு, நெருங்கிச் சென்றும் தாக்குவார்கள். இத்தகைய பகிர்யானங்களில்* சிஷ்யர்களே விடாமல் வென்று வந்தாலும், ஒவ்வொரு பகிர்யானத்திலும் பத்து, இருபது என்று சிஷ்யர் மடிந்தும் எதிரி கையில் பிடிபட்டும் வந்தார்கள். உள்ளேயும் ஆகாரம் குறைந்து போயிற்று. சத்துருவை ஓட்டி ஆனந்தபூரை விடுவிப்பர் என்று எதிர்பார்த்திருந்த வெளியூர்ச் சிஷ்ய சைனியத்தின் நாம நிஷானங்கூட ஒன்றும் காணோம். குரு அங்கங்கே சென்று கலங்கத் துவக்கும் சிஷ்யர் கூட்டத்துக்குத் தைரியமூட்டி வந்தான். இருப்பினும், மனதுக்கு இஷ்டந்தான், ஆனால் சதைக்குத் திராணியில்லை என்று பெரியார் சொல்லியது போல, முற்றுகையிடப்பட்ட சிஷ்யர் மனமுடையத் தலைப்பட்டார்கள். குருவின் வார்த்தைகள் கூட அவர்களுக்கு உற்சாகம் தரமுடியவில்லை. முழுகுகிற கப்பலைவிட்டு நீங்கியோடும் எலிகளைப்போல ஒருவர் இருவராகப் பலர் கோட்டையைவிட்டுச் சொல்லாமல் ஓடி விட்டார்கள். அபாய நிலைமையில் தோழர்களையும் சகதர்மிகளையும்* விட்டுவிட்டு ஓடிய சிஷ்யர்களை, இம்மையிலும் மறுமையிலும் அவர்கள் கதியற்றுப் போகக்கடவர் என்று குரு பயங்கரமாகச் சபித்தான். அச்சாபம் தங்கள்மீது சாராமற் காத்துக்கொள்ளவேண்டும் என்று பயந்துகொண்டு அனேக சிஷ்யர் ஓடாமல் நின்றார்கள். ஆனால் ஒவ்வொரு நாள் செல்லுவதும் அம்முற்றுகையிடப்பட்ட கோட்டையில் ஓர் யுகம் போல இருந்தது. ஆகாரமில்லாமல், தூக்கமில்லாமல், கால் வயிற்று ரொட்டிக்குக் கதறியழும் குழந்தைகளின் கஷ்டங்களைக் கண்ணால் பார்த்துக்கொண்டு, போர் செய்யும் ஆற்றல் எத்தனை பேருக்கு இருக்கும்? ஆகவே குருவின் சாபம்கூட அவர்களிற் பெரும்பாலோரைத் தப்பியோடுவதினின்று நிறுத்தச் சக்தியற்றுப் போய்விட்டது. இரகசியம் பேசிக்கொண்டு பலர் ஓட யத்தனித்துக் கொண்டிருக்கையில் குருவுக்குச் செய்தி எட்டிவிட்டது. அவன் அவர்களை உடனே வரவழைத்து, "உங்களைச் சிஷ்யர் என்று நினைத்திருந்தேன். சிஷ்யர்கள் வெல்வார்கள், அல்லது இறப்பார்கள்; குருவின் அனுமதி கேட்காமல் குருவையும் சேனாதிபதியையும் காட்டிக்கொடுத்துவிட்டு, சிஷ்யர் ஓடமாட்டார்கள். ஆகையால் நீங்கள் சிஷ்யர் அல்லீர்! உங்கள் கேசத்தையும் இரும்பு வளையையும் எடுத்துவிடுங்கள்: வாளையணியும் யோக்கியதை உங்களுக்கு இல்லை: ஆகையால் உங்களைச் சிஷ்யர் கூட்டத்தினின்று பிரஷ்டம் செய்துவிட்டேன். யாரடா அங்கே? இவர்களுடைய தாடியையும் கேசத்தையும் முண்டித்துவிட்டு இவர்களை வெளியே ஓட்டிவிடுங்கள்!" என்று வெகுண்டான். குருவின் ஆவேசத்தைக் கண்டு நடுநடுங்கி அவர்களிற் பெரும்பாலோர் அங்கேயே தங்க விரும்பினார்கள். ஆனால் குரு "இத்தகைய கோழைகள் கோட்டைக்குள் இருக்கவே கூடாது" என்று கண்டிப்பாய்க் கூறி, அவர்களுக்கு முண்டனம் செய்வித்து, அவர்களை வெளியே அனுப்பிவிட்டான்.

கோட்டையில் கோவிந்தனையும் அவன் குடும்பத்தையும் தவிர நாற்பதே நாற்பது சிஷ்யர்தாம் மிகுந்தார்கள். ஆனால் அவர்கள் எதற்கும் கலங்காதவர்கள்; காலஸாவின் மானத்தைத் தங்கள் உயிருக்கும் மேலாகப் பாவித்தவர்கள். கோட்டையின் நான்கு மதிற்புறங்களிலும் பீரங்கிகளை வைத்து அவர்களிற் சிலர் ஒவ்வொன்றாக மாற்றி மாற்றி வாயுவேக மனோவேகத்துடன் சுடுவதையும், மதில்மீது நின்றுகொண்டு அம்புகளைச் சரமாரியாகப் பெய்வதையும் கண்டு, சத்துருக்கள் கோட்டைக்குள் தங்களை அறியாமல் குருவுக்குப் பெரிய துணைக் கூட்டம் சேர்ந்துவிட்டது என்று நினைத்துவிட்டார்கள். ஆனால் குருவுக்கு உள்ளிருக்கும் பலம் தெரியுமாதலால், அவன் இனிக் கோட்டையை வெகு நாட்களுக்கு வைத்திருக்கமுடியாது என நினைத்து உள்ளேயிருக்கும் பெண்டிரையும் குழந்தைகளையும் வெளியில் போய் ஓர் காவலிடம் தேடிக்கொள்ளும்படி அனுப்பினான்.

[கதையின் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

* முற்றுகையிடப்பட்டவர் கோட்டைக்குள் நின்று வெளியேறிச் சத்துருக்களைத் தாக்குதல்.

* தங்கள் மதத்தினர்.

தங்கக் களஞ்சியம்

[பெரியார்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யக்கூடும்? அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் மறையாதவாறு காப்பாற்றுவதுதான் நாம் செய்யக் கூடியது. எவ்வளவோ பெரியோர்களின் சிறு சம்பவங்கள் கர்ண பரம்பரையாகவே இந்த நாட்டில் இருந்து வருகின்றன. அவைகளைத் திரட்டிக் காப்பாற்றுவது இலக்கிய உலகின் கடமையாகும். ஆகவே, அன்பர்களே! தமிழ் நாட்டின் பெரியார்களைப் பற்றிய ரஸமான சிறு குறிப்புகள் எதையேனும் அறிவீர்களானால் அதை எழுதி அனுப்புங்கள்; தங்கக் களஞ்சியத்தை நிரப்புங்கள்.

—சங்கு ஸுப்ரஹ்மணியன்.]

பாரதியாரும் முத்துப் புலவரும்

பாரதியார் சிறு வயதில் வளர்ந்தது எட்டையபுரத்தில். அங்கு கடிகை முத்துப்புலவர் என்று ஓர் ஏழை வித்வானிருந்தார். சமஸ்தானத்திலிருந்து வரும் சிறு தொகையைக்கொண்டுதான் அவருக்கு ஜீவனம். பாரதியாருக்கு இந்தப் புலவரிடத்தில் அபார பக்தி. ஆகவே தமக்கு வீட்டில் கொடுக்கும் பட்சணங்களை அப்படியே மறைத்து வைத்திருந்து முத்துப்புலவருக்குக் கொண்டுபோய்க் கொடுத்து விடுவாராம். ஒரு தடவை பழந்தோசைகளைக் கிற்றுத் தடுக்கில் ஒளித்து வைத்திருந்துகூடக் கொண்டுபோய்ப் புலவருக்குக் கொடுத்தாராம். பாரதியாரின் உறவினர்களோ மிக்கமடியும் ஆசாரமும் பார்க்கும் பிராம்மணர்கள். ஆகவே இப்படி ஒளித்துவைத்தாவது கொடுக்க வேண்டுமென்ற உணர்ச்சி பாரதியாருக்கு ஏற்பட்டது. அவருக்குப் பெரியோரிடத்திலிருந்த பக்திக்கு இது ஒரு உதாரணமாகும்.

—'சர்மா', (சென்னை.)

சமயோசித புத்தி

சென்னை நீதிஸ்தலத்தில் நார்ட்டன் என்ற பிரபல நியாயவாதி வாதித்துக் கொண்டிருந்தபோது, அன்று அமர்ந்திருந்த ஜட்ஜ் மெய்ம்மறந்து தூக்கக் கலக்கத்திலிருந்தாராம். "ஜட்ஜே! தூங்காதேயுங்கள்" என்று சொன்னால், அது கோர்ட்டை அவமதித்ததாகி விடும். ஆகவே, நார்ட்டன் சுற்றுமுற்றும் பார்த்தாராம். பங்கா இழுத்துக் கொண்டிருந்த வேலையாளும் அப்போது தூங்கிக்கொண்டிருந்தானாம். உடனே நார்ட்டன் இரண்டு பெரிய சட்டப் புத்தகங்களை எடுத்து "வாஸ்தவமாகத் தூங்குவதற்காகவா உனக்கு இங்கே சம்பளம் கொடுக்கிறார்கள்?" என்று கூறிக்கொண்டே எறிந்தாராம். புத்தகங்கள் விழுந்த சத்தத்தில் பங்கா இழுத்தவன், நீதிபதி எல்லோரும் விழித்துக்கொண்டார்களாம்.

—R. S (சேலம்.)

ஷாவின் துயுக்தி

ஆங்கிலப் பேரறிஞரான பெர்னார்ட் ஷாவுக்கு ஒரு நடிகமாது ஓர் தடவை கடிதம் எழுதினாள். "தாங்கள் அறிவில் உயர்ந்தவர். நானோ அழகிற் சிறந்தவள். நாம் இருவரும் திருமணம் செய்து கொள்வோமாகில், நமக்குப் பிறக்கும் குழந்தை அழகும் அறிவும் நிறைந்ததாயிருக்குமன்றோ!" என்று அவள் எழுதினாள். அதற்கு ஷாவின் பதில்: "அடி பெண்ணே, என் ரூபத்தையும் உன் மூளையையும் கொண்டு ஒரு குழந்தை பிறந்து விட்டதானால் என்ன செய்வது?"

ஷாவுக்கு 10 பவுன்

மிஸ்டர் எ. பி. பி. ஸாலமன் என்று ஒரு கனவான் இறந்து போவதற்கு முன் ஓர் உயில் எழுதி வைத்துச் சென்றார். அந்த உயிலில் தமது வாழ்க்கைக் காலத்தில் ஆனந்தமாக யார் யாருடைய புத்தகங்களைப் படித்தாரோ அந்தப் பேராசிரியர்களுக்கு ஆளுக்கு 10 பவுன் வீதம் தம் சொத்திலிருந்து எடுத்து அனுப்பும்படி எழுதி வைத்துச் சென்றார். அந்தப் பேராசிரியர்களுள் பெர்னார்டு ஷாவும் ஒருவர். அவரிடம் இந்தப் பத்துப் பவுனைக் கொண்டுபோய்க் கொடுத்தபோது அவருக்கு இயற்கையான கோமாளித் தொனியில் அவர் சொன்னதாவது:

"இந்தப் பத்துப் பவுனை மிக்க சந்தோஷமாக வரவேற்கின்றேன். என்னுடைய அபிப்பிராயப்படி நான் பெரிய மனிதன்தான். இன்னொருவர் என்னைப் புகழ்வதைப் பற்றி நான் லட்சியம் செய்வதில்லை. என்னுடைய புத்தகங்களைப் படிக்கும் ஒவ்வொரு மனிதனும் அவனவன் சாவதற்கு முந்தி இந்த மாதிரி பத்துப் பத்துப் பவுன் தருவானானால் நன்றாயிருக்கும்"

ஷாவின் சரித்திரத்தை எழுதுபவர்கள் இந்த பத்துப் பவுன் உயிலை மறக்க முடியுமா?

தூக்க சக்தி

துருக்கியின் ஸர்வாதிகாரியான கமால்பாஷா பெரிய உழைப்பாளி. ஓயாமல் 30 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்த காலங்களும் உண்டு. ஆனால் வேலை செய்யும்போது இடையிடையே டீ சாப்பிடுவதுண்டு. ஒரு தடவை 120 கிண்ணம் தேயிலைப் பானம் அவர் சாப்பிட்டிருக்கிறாராம். கடுமையாக வேலை செய்த பின்னர் அவர் படுக்கைக்குப் போனால் 24 மணி நேரம் கூடத் தூங்குவதுண்டாம். குதிரைமேலிருந்தபடியே சில நிமிஷ நேரம் தூங்கி விழித்துக்கொள்வானாம் நெப்போலியன். "இத்தனை நிமிஷங்கள் தூங்கப்போகிறேன்" என்று சொல்லிவிட்டு, மகாத்மாஜி அத்தனை நிமிஷங்களே தூங்குவது வழக்கம். தூக்கத்தையும் அடக்கியாள்வது பெரியோரின் மனோபலம்.

சுயமதிப்பும் சாந்தமும்

சர் ஆஷ்டோஷ் முகர்ஜி யென்பவர், கல்கத்தா சர்வகலாசாலை வைஸ் சான்சலராக இருந்து அந்நாட்டுக் கல்விக்காகப் பெரிதும் பாடுபட்ட மகான். சுயமதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதில் உயிரையும் விடக்கூடியவர். ஒரு சமயம் அவர் கல்கத்தாவிலிருந்து மற்றோர் இடத்திற்குப் போவதற்காக ரயில் வண்டியில் முதல் வகுப்பு இடத்தை ரிசர்வ் செய்திருந்தார். இவர் ஏறவிருந்த அறையில் ஐரோப்பியரொருவர் முன்னரே ஏறியிருந்தார். தாம் ஏறிய வண்டியில் ஒரு இந்தியன் ஏறுவதா வென்று ஐரோப்பியருக்கு ஆத்திரம் பொங்கியது. ஏறக்கூடாதென்று அவன் தடுக்க இவர் முறைத்து வாதம் செய்து கொண்டிருக்கும்போது, வண்டி புறப்பட்டு விட்டது. ஐரோப்பியர், சட்டெனறு முகர்ஜியின் தலையிலிருக்கும் தொப்பியைக் கழற்றி, ஜன்னல் வழியே வெளியில் எறிந்துவிட்டார். முகர்ஜி இதைக் கண்டு சிறிதும் கோபங்

யாத்ரா மார்க்கம்

ஏன் திட்டம் மாறியது

ஜனவரி 25 தேதி மாலை ஆறு மணிக்குப் போக வேண்டியதற்குப் பதிலாக, காந்திஜீ மதுரைக்குப் போன பொழுது இரவு $11\frac{1}{4}$ மணி ஆகி விட்டது. பிரயாணத்திற்குத் திட்டம் போட்டவர்களை மகாத்மாஜீ மறுநாள் சந்தித்தபோது சொல்லியதாவது :—

"பித்துப் பிடித்ததுபோல் ஓட்டமா! நான் சுக்கல் சுக்கலாய்ப் போய் விடுவேன்போ லிருக்கிறதே! எனக்கு வேறு வேலையு மிருக்கிறது. பணப் பைகளே குறியாக, நான் ஓடும்படி ஏற்பாடு செய்யாதீர்கள். சேவை புரியும் ஊழியரையும் நான் சந்திக்கவேண்டும்; அவர்கள் சிரமங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்; அவர்கள் செய்திருக்கும்வேலையை அறிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது நீங்கள் போட்டிருக்கும் திட்டத்தில் அவற்றிற்குச் சாவகாசமே கிடையாது. பணவசூல் ஒன்றையே லட்சியமாய்க் கொண்டு இதைத் தயாரித் திருக்கிறீர்களே! பணமே கிடைக்காத இடமா யிருந்தாலும் சரி; ஹரிஜன இயக்கத்திற்கு வேறு வகையில் அவசியமா யிருக்கும் மற்ற இடங்களுக்கும் நான் போகவேண்டும்."

சிரம சாந்திக்கு அர்த்தம்

காந்திஜீக்கு ஒருவார ஓய்வுக்குத் தாக்கர் பாபா ஏற்பாடு செய்திருந்த கூனூர் கடல் மட்டத்திலிருந்து 5,800 அடி உயரத்திலுள்ள பூமி. இதைச் சுற்றிலும் அங்குமிங்கும் பல அழகிய குன்றுகள் இருக்கின்றன. கண்ணுக்கு மிக இனிமையான காட்சி; மனத்தை உயர்த்தும் சக்தியும் கொண்டது. இந்த இடத்தில் காந்திஜீக்குக் கிடைத்த ஓய்வு, வெறும் பெயர் மாத்திரமானது தான். காந்திஜீயைப் பார்க்க வந்த ஒருவர் "மகாத்மாஜி, இவ்விடம் தங்களுக்கு நல்ல சிரம சாந்தியா யிருக்கிற தல்லவா?" என்று வினவினர். "ஸர் ஜான் லிப்பாக் என்றவர் சிரம சாந்தி என்பதற்கு என்ன அர்த்தம் சொல்லியிருக்கிறார் தெரியுமா? ஒரு வேலையை விட்டு இன்னொர் வேலைக்கு மாறுவதுதான் சிரம சாந்தி யென்று அவர் சொல்லியிருக்கிறார். அதையே நான் பின்பற்றி யிருக்கிறேன்" என்று பதிலுரைத்தார் காந்திஜீ. அதி காலையிலிருந்து இரவு வெகு நேரம் வரை போராய்க் குவிந்திருக்கும் கடிதங்களுக்கெல்லாம் காந்திஜீ பதில் எழுதிக்கொண் டிருக்கிறார். புதுக் கடிதங்களும் வந்து கொண்டே யிருக்கின்றன. இப்படிக் கடிதங்களுக்குப் பதில் எழுதுகையில், பல சமயம் இரவில் விளக்கிலிருந்த எண்ணெயெல்லாம் ஆகி அது அணைந்துகூடப் போயிருக்கிறது. எவ்வாறாயினும், பாக்கியிருந்த அநேகம் கடிதங்களுக்குக் காந்திஜீ பதில் எழுதிவிட்டது சந்தோஷிக்கத் தக்கதல்லவா?

சுயமரியாதைக்காரர் பேட்டி.

கன்னியாகுமரி முனையில் சில சுயமரியாதைக்காரர் காந்திஜீயை வந்து பார்த்துப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

கேள்வி :—கிருஸ்தவர், முஸ்லீம் இவர்களிலேயும் தீண்டாதோர் இருக்கிறார்களே; அவர்களுக்கும் சேர்த்தா உங்கள் திட்டம்?

பதில் :—அப்படிப்பட்ட பெரிய திட்டம் ஒன்றும் நான் போடவில்லை. காரணம் அது எனக்குப் பிடிக்கவில்லை என்பதல்ல. அவர்களையும் சேர்த்திருக்கும் திட்டம் சுயராஜ்ய இயக்கம்தான். சுயராஜ்யம் வந்தால், இந்தியாவிலுள்ள சகல ஏழைகளுமே பயனடைவர்.

சுயமரியாதை ஹரிஜன நண்பர்கள் ஆலயப் பிரவேசம், ஹரிஜன் என்ற பெயர் இவைபற்றிக் கேட்ட கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்டு, இறுதியில் காந்திஜீ கூறியதாவது :—

'அறிவுத் தெளிவு இயக்கத்தைச் சேர்ந்த அநேக நண்பர்கள் எனக்குச் சிநேகிதம். அவர்களில் ஒருவர் என்னிடம் என்ன சொன்னார் தெரியுமா? 'அறிவுத் தெளிவுக்காரரைப் போலவே நீங்களும் பேசுகிறீர்களே' என்றார். நான் வேறெவ்வா றிருக்கமுடியும்? நீங்கள் பெயரிலே அறிவுத் தெளிவுக்காரர்; நான் அதன் உட்பொருளிலே அறிவுத்தெளிவுக்காரன். ஒன்று மாத்திரம் உங்களுக்கு நான் சொல்லவேண்டும். அதாவது, ஆலயப் பிரவேச விஷயத்தில் நமக்குள் அபிப்பிராய பேதம் இருந்தாலென்ன? அபிப்பிராய பேதமில்லாத விஷயங்களில் ஒற்றுமையோடு உழைப்போமே."

அந்த வாலிப நண்பர்களும் 'சரி' யென்று சம்மதித்தார்கள்.

—"ஹரிஜன்."

....தமிழில் பாடத் தொடங்கியதும் "இதென்ன, பூலோகமா, கைலாசமா?" என்று திகைப்படைந்தேன்.

—கட்டுரை.

பிறகு, கைலாசந்தான் என்று முடிவு செய்தீர்களாக்கும்.

* * *

88 பக்கங்கள் விலை அணா 2.

—பத்திரிகையின் அட்டை.

பக்கங்களுக்கு விலையா? உள்ளேயுள்ள விஷயங்களுக்கு விலையா?

* * *

உலக மேதாவிகளுக்கு பட்டினி ஆகாரமொன்றே வெகுவாகக் கிடைத்திருக்கிறது.

—ஓர் கட்டுரை.

இப்படி ஓர் ஆகாரம் எந்த வீட்டில் தயாராயிருக்கிறது? எந்த ஹோட்டலிலாவது விற்கப்படுகிறதா?

* * *

தங்கள் செல்வத்தை நற்பயன் படுத்தும் பிரமேயம் வேறு எப்போது ஏற்படப் போகிறது?

—பூகம்ப வேண்டுகோள்.

அடிக்கடி இத்தகைய பிரமேயங்கள் ஏற்பட வேண்டுமென்பது ஆசிரியர் பிரார்த்தனையா?

* * *

எல்லாம் உமது முட்டாள் தனத்தால் விளைந்த வினைவிான்.

—வாரப் பத்திரிகையில் ஓர் கடிதம்.

கடைசிப் பதத்தைப் படிப்ப தெப்படியோ? அர்த்த மென்னவோ? இது யாருடைய அசிரத்தையால் விளைந்த வினைவோ?

* * *

இறந்து போனவர்கள் ஜாபிதா மட்டும்தான் படிப்பதற்குச் சற்று ரசமாக இருக்கும்.

—ஓர் கட்டுரை.

மாமியார் செத்த செய்தி ஒரு வேளை சில நாட்டுப் பெண்களுக்கு ரசமாக இருக்கலாம்; புருஷனைப் பறிகொடுத்த மனைவியும் அந்த ஜாபிதாவை ரசிப்பதானால் அந்த யுகத்தை என்னென்பது.

கலைமகள்

“பத்திரிகை என்பது என்ன தெரியுமா? ஒட்டத்திலே உதிக்கும் இலக்கியம்தான் அது” என்றார் மார்லீ என்ற பிரபு. இதை நாம் முற்றிலும் ஒப்புக்கொள்ள முடியாது, ஒப்புக்கொள்ளவும் மாட்டோம். எல்லாப் பத்திரிகைகளும் அப்படி நடக்கவில்லை; நடக்க இயலாது. ஆனால், தற்காலத்தில் அநேகம் பத்திரிகைகள், தங்கள் விரைந்த வாழ்க்கையிலே, இலக்கியத்தைச் சிருஷ்டித்துச் செல்கின்றன; அது அவசியமாயும் இருக்கின்றது. சென்னை மைலாப்பூரிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் “கலைமகள்” இத்தகைய ஒரு தமிழ் மாத சஞ்சிகையாகும்.

தமிழுக்கு உண்மையிலே சேவை புரிய வேண்டுமென்றால், ‘கலைமகள்’ போன்ற பத்திரிகைகளால்தான் முடியும். அதனால் கிடைக்கக்கூடிய முழுப் பலனையும் அறுவடை செய்துகொள்ள வேண்டியது தமிழ்நாட்டின், தமிழரின், கடமையாகும்.

“கலைமக”ளின் சில சிறந்த அம்சங்களை எடுத்துச் சொல்லும்பொழுது, மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவருக்கு, ஏதோ மிகைப்படுத்தியுரைப்பதுபோல் தோன்றும். ஆயினும், உண்மையைச் சொல்லாதுவிட முடியுமா? அமைப்பு என்பது ஒரு சிறந்த லட்சணம். என்னதான் அற்புதமான விஷயங்களை எழுதினாலும், அதற்கேற்ற சுத்தமான, அழகிய, அமைப்பு இல்லாத பத்திரிகை, ‘ஸென்ட்’ என்ற வாசனைச் சரக்கைப் போல்தானிருக்கும். என்றாவது, மணமிகுந்த புது மலருடன் பரிமளத் தைலம் போட்டிபோட முடியுமோ? ‘கலைமகளி’ன் அமைப்பு மனோகரமானது. நேர்த்தியான தாளில், எழுத்து இலக்கணப பிழைகளே யில்லாத நல்ல கட்டுரைகளைப் படிப்பது ஒரு தனி யின்பத்தைத் தரும். அதைக் ‘கலைமக’ளில் பெறமுடியும்.

கலைமகளில் பல்வேறு விஷயங்கள் காணப்படுகின்றன. அறிவை வளர்க்கும் கட்டுரைகள், அழகிய கதைகள், கலைவிளக்கமான வியாசங்கள் இவை எல்லாம் ‘கலைமக’ளை அலங்கரிக்கின்றன. தமிழ்ப் பாண்டித்யத்தில் முதிர்ந்த மகா மகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் எழுதியுள்ள ‘மகா வைத்திநாதய்யர்’ சரித்திரக் குறிப்பைப் படிக்கும்பொழுது, பண்டிதர்கள் மனது வைத்தால், எவ்வளவு லளிதமாக வசனநடை எழுதலாம் என்பது நன்கு விளங்குகிறது. சிரமமில்லாமல், ஆங்காங்கு அடக்கமான ஹாஸ்யரஸத்தையும் சிறிது சிறிது வர்ணனையும் கலந்து, அவர் எழுதியிருக்கிறார். சலசலப்பற்ற ஆற்றலான ஒட்டத்துடன் கூடிய அருவி போன்ற நடை; பொருத்தமுள்ள சொற்கள்.

காயகசிகாமணி ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதரின் சங்கீதக் கட்டுரையும், தி. ரா. மகாலிங்கம் அவர்களது தாவர வருக்கத்தைப் பற்றிய வியாசமும், ஸ்ரீமான் அப்பு ஸ்வாமி அய்யரின் விவசாயத்தைப் பற்றிய சரித ரீதியான ஆராய்ச்சியும் ஊன்றிப் படிப்பவருக்குப் பயன் தரும் எழுத்துக்களாகும். பரிசு பெற்ற பிச்சமூர்த்தியின் ‘முள்ளும் ரோஜாவும்’, சங்கு ஸுப்ரஹ்மண்யனின் சரித்திர சம்பந்தமான ‘பித்துக்குளி பீஜ(?)’ என்பன ரஸமுள்ள கதைகள். இன்னும் பல விஷயங்களையும் தனித் தனி விஸ்தரித்துக்கொண்டிருப்பானேன்?

‘கலைமகளி’ன் நடை சற்றுத் தளர்ந்து, நயப்படுமானால், அதிக ருசியாய்த்தானிருக்கும். ஆனால், சில விஷயங்களைச் சில நடையில்தான் எழுத முடியும். விஷய ஞானத்துக்குத் தாகம் கொண்டிருப்பவன், சிறிது கடின நடையைக் கண்டு மருள மாட்டான். விஷயத்தை இழந்த எளிய நடையைக் கண்டு, அவன் மயங்கவும் மாட்டான். எனினும், என்ன முயன்றாலும் எளிதாய்ச் சொல்ல முடியாத பொருள்களை யல்லாமல், பிறவற்றைத் தனித் தன்மையோடு சுலபமானதொரு நடையில் எழுதுவது நலம் என்று மட்டில் சொல்லாதிருக்க இயலவில்லை.

ஒரு பத்திரிகை, என்னதான் இலக்கியம், சயின்ஸ், கலை முதலிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தாலும், இத்தனைக்கும் ஜீவநாடியான ஜனங்களின் தற்கால ராஜீய, பொருளாதார, சமூக வாழ்க்கைகளோடு பூரண உறவு கொள்ளா விட்டால், முழுப் பலனும் காண முடியாது. அதுவும் தற்காலம் நமது நாடு உள்ள நிலைமையில், ‘கம்பார்ட்மெண்ட்’ பத்திரிகைகளுக்கு இடமில்லை யென்றே தோன்றுகிறது. ‘கலைமகள்’ தனது சொந்தத் தொனியில் பிரத்யட்ச ராஜீய, பொருளாதார, சமூகப் பிரச்சினைகளில் சற்று ஊக்கத்துடன் கலந்துகொண்டால், அதிகப் பயன் உண்டாகலாம்.

“கலைமகள்” பத்திரிகையின் விலை பிரதி ஒன்றுக்கு ஆறணா. அது வேறு விதமா யிருக்க முடியாது. அருமையான அமைப்பு, நேர்த்தியான பொருள், ஆனால் விலை மட்டில் அரையணாவாக இருக்கவேண்டு மென்றால், அது சாத்தியமல்ல. நல்ல பொருளுக்கு நல்ல விலைதானே தரவேண்டும்.

—தி. ஜ. ர.

கலைமகள்

ஓர் உயரிய மாதப்பத்திரிகை

5-ம் தொகுதி

ஆரம்பம் ஜனவரி (January 1934).

வருடச் சந்தா (தபால் செலவுடன்)

இந்தியா, பர்மா, ஸிலோன்	ரூ. 4
பினாங், சிங்கப்பூர், நேடால்	ரூ. 6
தனி சஞ்சிகை அணா—6	35 சதம்

விளம்பர விகிதம்

முழுப் பக்கத்திற்கு ஒரு தடவைக்கு ரூ. 15

அரைப் பக்கத்திற்கு ஒரு தடவைக்கு ரூ. 9

அட்டைப் பக்கங்களுக்குத் தனி விகிதம்.

“கலைமகள்” பத்திரிகைக்குச் சந்தாதார்கள் சேர்க்கவும், “கலைமகள்” பிரசுரங்கள் விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை.

“கலைமகள்” சந்தாதார்க்கு மாத்திரம் அநேகம் அரிய தமிழ் நூல்கள், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

கலைமகள் ஆபீஸ்,

மயிலாப்பூர், சென்னை.

தெரிந்தவர் தெரிவிக்க.

மிகவும் புராதனமான காலத்திலிருந்து, நமது நாட்டில், ஹரிஜனங்களில் மிகப் பெரும்பாலோர் தோல் பதனிடும் தொழில் செய்து வருகிறார்கள். இதனால், ஹரிஜன சேவை செய்வோர் இத் தொழிலின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டியதா யிருக்கிறது. தோல் பதனிடும் குடிசைத் தொழிலுக்கு நூதன ஸயின்ஸ் முறைகளை எவ்வாறு உபயோகிக்கலாம் என்று கண்டுபிடிக்க வேண்டியது அவசியமா யிருக்கிறது.

கோடம்பாக்கத்தில் ஸ்தாபிக்க விருக்கும் தொழிற் கலாசாலையில் தோல் பதனிடும் வகுப்பும் நடத்த உத்தேசம். நூதன ஸயின்ஸ் முறைகளையும் கருவிகளையும் அத்தொழிலில் எப்படி உபயோகிக்கலாம் என்பதைத் தெரிவிப்பவர்களுக்கு நமது நன்றி உரியதாகும். மேலும், ஹரிஜனங்களுக்கு ஏற்ற தொழில்கள் என்னென்ன என்ற யோசனைகளையும் வரவேற்கிறோம்.

உபாத்தியாயர்கள் தேவை.

கோடம்பாக்கத்தில் ஆரம்பிக்கப் போகிற கைத்தொழிற் கலாசாலையில் பற்பல குடிசைத் தொழில்கள் கற்றுக் கொடுப்பதற்கு, அவற்றில் பயிற்சியுள்ள ஆசிரியர்கள் தேவை. வசிப்பதற்கு இலவச வசதி செய்து தரப்படும். தங்கள் யோக்கியதாம்சங்களையும், என்ன சம்பளம் தேவை என்பதையும் தெரிவித்து, கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.

ஹரிஜன மாணவர் தேவை.

நமது மாகாணத்தின் பல விடங்களிலிருந்தும் ஹரிஜன மாணவர்களை இக் கலாசாலையில் சேர்த்துக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை வரையில்தான் தற்பொழுது சேர்த்துக் கொள்ளமுடியும். சேர விண்ணப்பம் செய்து கொள்ளும் சிறுவர், நல்லொழுக்க முடையவரா யிருக்கவேண்டும்; மரக்கறி போஜனத்தை மட்டும் உண்டு வாழச் சம்மத முடையவராயு மிருக்கவேண்டும். தமிழ் நாட்டில் அங்கங்குள்ள ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசிகளின் மூலமே தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிக் கொள்ளவேண்டும். 12 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், முதல்பாரம் படித்துத் தேறியவர்களாயும் உள்ள சிறுவர்களே தேவை.

காரியதரிசி,

கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலை,

8, வி, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.